# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (03.12. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (149) அன்பளிப்பு: 60 p


மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல. எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.

— தமிழீழத் தேசியத் தலைவர்

# இராணுவ அடக்குமுறையால் தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அழிக்க முடியாது

**மாவீரர் நாள் செய்தியில் தேசியத் தலைவர்**

"கடந்த ஐம்பது ஆண்டு காலமாக, அடக்குமுறை என்ற ஒரே வழியில்தான் சிங்களம் சென்று கொண்டிருக்கின்றது. இராணுவ அடக்குமுறைக் கொள்கையால் சிங்களதேசம் தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கின்றதே தவிர, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிட முடியாது. இந்த உண்மையைச் சிங்களப் பேரினவாதம் என்றோ ஒரு நாள் உணர்ந்தே தீரும். ஆயினும் இராணுவ வன்முறையைக் கைவிட்டு, சிங்களம் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த எதிர்பார்ப்புடன் நாம் எமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகையல்ல! அது இரத்தம் சிந்தி, உயிர்விலை கொடுத்து, போராடிப் பெறவேண்டிய புனித உரிமை. எனவே, நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடையத் தொடர்ந்து போராடுவோம்" என, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது மாவீரர் நாள் (27–11–97) உரையில் அழுத்திக் கூறியுள்ளார்.

இவ் உரையின் முழுப்பகுதியும் நடுப்பக்கத்தில் உண்டு.



## சித்திரவதை கொலைகளை விட திட்டமிட்ட கொலைகளே அதிகம்

✳ கைதாக்கப்பட்டவர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு இனந்தெரியாத இடத்துக்குக் கொண்டு சென்று கொன்று குவித்தனர்.

✳ ஒரே நாளில் 39 தமிழ் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தால் இனக்கொலை செய்யப்பட்ட சம்பவம் உறுதியாகிறது.

கடந்த ஆண்டு (1996) ஆடி மாதம் 19ஆம் திகதி காலை

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## யாழ் குடாநாட்டில் 600க்கு மேற்பட்ட தமிழர்கள் சிறிலங்காப் படைகளால் இனக்கொலை

**சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை**

☐ உயிராபத்தில் தமிழ்ப் பொதுமக்கள்

☐ சிறிலங்காப் படை விலக ஐ.நா உதவவேண்டும்.

சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டில் அறுநூறுக்கு மேற்பட்ட பொதுமக்கள், 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் எவ்வித காரணங்களும்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...



16.11.97 அன்று இத்தாலியில் நடைபெற்ற தேசிய மாவீரர் நினைவு நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்வின் ஒருபகுதி......

## "யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டது என்பதைவிட இன்னும் இராணுவ முற்றுகையில் உள்ளதென்பதே உண்மை"

— யேர்மன் கலாநிதி பியட் பார்ட்டோல்ட்

நான் ஆனி 1994இல் யாழ்ப்பாணத்துக்கு எங்கள் உதவியில் இயங்கும் கல்வி அமைப்புக்களைப் பார்வையிடச் சென்றபொழுது அங்கு பாலர் பாடசாலைகள், பள்ளிக்கூடங்கள், பல்கலைக்கழகம் என்பன நன்கு செயற்பட்டன. விடுதலைப் புலிகளின் கொள்கை பரப்புரைக் கூட்டங்களில் பங்குபற்றியுள்ளேன். அவர்களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன். மகளிர் அமைப்பினரையும் சந்தித்தேன். யாழ்ப்பாண அரச அதிபரையும் சந்தித்தேன். கல்வி நிறுவனங்கள் அரசியல் கலப்பின்றி சுதந்திரமாகச் செயற்படுவதைக் கண்டேன்.

மக்கள், சிறிலங்கா அரசின் இச் செயலால் வெளியுலகுடனான செய்தித் தொடர்புகள் தொலைபேசித் தொடர்புகள் மட்டுமன்றி மின்சாரம் கூட இன்றி வாழ்ந்தனர். பொருட்கள்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# "பிரபாகரன் ஒரு சிறந்த அரசியல் சாதுரிய மிக்கவர், மதிநுட்பம்மிக்க இராணுவ வல்லுனர்"

**- டிக்சிற்**

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரதான சூத்திர தாரிகளில் ஒருவரும் முன்னாள் சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவருமான ஜே.என். டிக்சிற், "பிரபாகரன், அரசியல் சாதுரிய மிக்கவர்: மதிநுட்பம் நிறைந்த இராணுவ வல்லுனர். அவர் குறித்து, எனக்குக் கடந்த பத்து ஆண்டுகளாக வேறுபட்ட பார்வை இருந்தது. ஆனாலும் பிரபாகரன், விடயங்களைக் கையாண்டு நிர்வகித்த ஆற்றல்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான பல பத்திரிகைச் செய்திகள் கட்டுரைகளைப் படித்தமையும் பிரபாகரன் பற்றிய கருத்தை மாற்றவைத்தது" இவ்வாறு தனது 'அசைன்மெண்ட் கொழும்பு' (Assign - ment Colombo) எனும் நூலில் கூறியுள்ளார். பிரேடெர்சியா ஜேன்ஸ் (Frederscia Janes) க்கு அவர் அளித்த பேட்டியிலும் இதை வலியுறுத்தி உள்ளார்.

வேறு ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இந்தியத் தலையீட்டை இந்திரா காந்தியின் கொள்கை எனக் கூறுவதை விட, சிறிலங்காவின் தமிழின எதிர்ப்பு செயற்பாட்டில் அமெரிக்கா, இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகள் காட்டிய ஆர்வங்களே தூண்டின எனக் கூறுவதே பொருந்தும் என்றார்.

வேறு ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், தான் ஒரு அரச அலுவலர் எனவும் அரசியல்வாதி அல்ல எனவும் தனது பிரதமரின் கட்டளைப்படி இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கக்கூடியவற்றைச் செய்ததாகக் கூறினார்.

அத்துடன், இலங்கையின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் காப்பாற்ற 2000 இந்திய அமைதிப் படையினர் உயிரை விலையாகக் கொடுத்து ள்ளனர் எனவும் கூறியுள்ளார். தொடர்ந்து கூறுகையில், இலங்கை விடயத்தில் இனி இந்தியா உள் இறங்காது என்றே தாம் நம்புவதாகவும் அப்படி ஏதாவது, தவிர்க்க இயலாத சந்தர்ப்பம் தோன்றினால், இனி இந்தியா தலையிட்டுப் பாதியில் திரும்பாது என்பதே தன் நினைப்பாக உள்ளதெனவும் கூறினார். அதேவேளை, இந்தியாவின் முன்னைய அனுபவங்களையும் செயற்பாடுகளையும் கவனத்தில் எடுத்து மிகக் கவனமாகவே செயற்பட வேண்டும் என்றும் கூறினார்.

# சித்திரவதை கொலைகளை விட .....

ஒன்பது மணியளவில் நாவற்குழியையும், பதினொரு மணிக்கு தச்சன்தோப்பையும் ஒரு மணிக்கு கைதடியையும் மூன்று மணிக்கு மறவன் புலவையும் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர், நூற்றுக்கணக்கான தமிழ் பொதுமக்களை வயோதிபர் முதல் பள்ளிச் சிறுவர்கள் வரை ஆண், பெண், நோயாளி என வித்தியாசங்கள் ஏதுமின்றி விசாரணை என அழைத்துச் சென்றனர். இவர்களில் 39 பொதுமக்கள் ஒரே நாளில் காணாமல் போயினர்.

இந்த அப்பட்டமான மனித உரிமை மீறல் குறித்து தற்பொழுது உறுதிப்படுத்தப்பட்ட உண்மைகள் சர்வதேச சமூகத்துக்கு முன்பாக கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த 39 மக்களினது விபரங்களைச் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டு, இவர்கள் காணாமல் போனமைக்குச் சிறிலங்காப் படையினரே பொறுப்பு என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது.

இவ் 39 தமிழ் பொதுமக்களும் இனஅழிப்பு - இனக்கொலை செய்யப்பட வேண்டும் எனும் நோக்கிலேயே சிறிலங்காப் படையினரால் கொன்றழிக்கப்பட்டதை இவர்களுடன் கைதாகி விடுதலையாகிய பலரின் சாட்சியங்கள் தெளிவாக்கியுள்ளன.

கடந்தாண்டு ஆடி 19ஆம் திகதி சுற்றிவளைப்பு நடவடிக்கையில், ஈடுபட்ட இராணுவத்தினர் தலையாட்டிகளின் முன்னாள் மக்களை நிறுத்தி, அவர்களது சமிஞ்கைகளுக்கு ஏற்றவாறு பலரைக் கைதாக்கி அவர்களது கைகள், கால்கள், கண்களைக் கட்டி வாகனங்களுள் தூக்கி வீசியுள்ளனர். பின்னர் அவர்களை நாவற்குழி மகாலட்சுமி பாடசாலைக்குக் கொண்டு சென்று பயங்கர சித்திரவதைக்கு உள்ளாக்கி விட்டு, மாலை மூன்று மணியளவில் காணாமல் போன 39 பேரையும் அவர்களின் முழுப் பெயர்களைச் சொல்லிப் பலமாகக் கூப்பிட்டுள்ளனர். கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்த மற்றையோர் அவர்களை விடுதலை செய்வதற்காகவே கூப்பிடுவதாக நினைத்துள்ளனர். ஆனால், பின்னர் இவர்களது கண் கட்டுக்களை அவிழ்த்து புகைப்படங்கள் எடுத்த பின், மீண்டும் கண்களைக் கட்டி காங்கேசன்துறை சிறிலங்கா காவற்துறை நிலையத்துக்குக் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளார்கள். காங்கேசன் துறையில் வைத்தே பெயர் சொல்லிக் கூப்பிட்ட 39 பேரும் காணாமல் போன உண்மை பொதுமக்களுக்கு புரிந்துள்ளது. அன்று முதல் இன்றுவரை இவ் 39 பொதுமக்களுக்கும் என்ன நிகழ்ந்தது என்பதை வெளியிட சிறிலங்கா இராணுவத்தினர் மறுத்து வருகின்றனர். இவர்கள் அனைவருமே இனக்கொலைக்கென சிங்களப் படைகளினால் தேர்ந்தெடுக்கப்பட்டு இனஅழிப்புக்கு உள்ளாகியுள்ள உண்மை இப்பொழுது நிரூபனமாகியுள்ளது.

எனவே, சிறிலங்கா அரச படையினர் விசாரணைகளின் பொழுது நடாத்தும் சித்திரவதைகளினால் மட்டுமல்ல, திட்டமிட்ட இனஅழிப்புக்கு எனவும் திட்டங்கள் வகுத்து செயற்படுவதினால் தமிழ் மக்கள் இனக்கொலை அடையும் பயங்கர உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

**இந்நிலையில், இனியும் சிறிலங்காவை 'இன அழிப்பு" எனும் சர்வதேச குற்றத் திற்காக விசாரணைக்குட்படுத்த ஐக்கிய நாடுகள் சபை தயங்குமானால் தொடர்ந்தும் தமிழர்களை இனஅழிப்புச் செய்ய சிறிலங்காவை ஊக்கப் படுத்தும் செயற்பாடாக அது மாறும் என்பதே சர்வதேச புலம்பெயர் வாழ் தமிழர்களின் கருத்தாகவுள்ளது.**

# ''யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டது என்பதைவிட......

தடைசெய்யப்பட்டு இருந்தினால் விலைவாசி உயர்வு இருந்தது.

ஆனாலும், யாழ். குடாநாடு எங்கும் அவர்கள் தமது தாயகம் என்ற உரிமையுடன் சுதந்திரமாக உலாவினர். சோதனைச் சாவடிகள் இல்லை. விடுதலைப் போராளிகளை தெருக்களில் காண்பது அரிதாக இருந்தது. இந்தச் சுதந்திரம் எனக்கும் இருந்தது. நானும் நான் விரும்பியவாறு எங்கும் சென்று வந்தேன்.

மறுபடியும் 1997 செப்டெம்பரில் நான் மீளவும் யாழ். நகர் கல்வி அமைப்புக்களை பார்வையிட்டேன். உத்தியோகபூர்வ அறிவித்தலின்படி யாழ்ப்பாணத்தில் எல்லாம் வழமைக்கு திரும்பிவிட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், எனது நேரடி அனுபவமோ முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

அழிவுகளின் காட்சிகள் பயங்கரமானவை. எங்கு பார்த்தாலும் இடிபாடுகளின கோலம். மின்சாரம் வழங்கப்பட்டதாகக் கூறினாலும் மூன்றே மூன்று மின்குமிழ்கள் மட்டுமே வீடுகள் நெருக்கமான பகுதி ஒன்றில் எரிவதைக் கண்டேன். நான்கு தொலைபேசிகள் மட்டுமே அங்கு செயற்பட்டன. நகரம், சிறிலங்காவின் நகரங்களிலிருந்து துண்டிக்கப்பட்டே காட்சி அளித்தது. அரசு பல வாக்குறுதிகளை அளித்தபோதும், அவை எவையுமே நிறைவேற்றப்பட்டதாக இல்லை.

என்னைத் திடுக்கிட வைத்த உண்மை என்னவென்றால், எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரே நின்றமை. இத்தனைக்கும் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன எனக் கூறப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு 20 அடி தூரத்திற்கும் ஒரு சோதனைச் சாவடி. மாட்டுவண்டியில் சவாரி செய்பவர் முதல் சைக்கிள் ஓட்டுபவர், காரில் வருபவர் ஈறாக அனைவருமே இறங்கி உடற் சோதனைக்கு ஆளாக வேண்டும். சிறிலங்கா இராணுவத்தினரோ சிங்களத்திலேயே தமது தொடர்புகளை வைத்துக் கொள்வர். தமிழர்களோ மொழி புரியாது தவிப்பது மட்டுமல்ல, தண்டனைகளும் பெறுவர். இதனால், மக்கள் நிலை பெரிதும் தர்மசங்கடமாகக் காட்சி அளித்தது.

ஆயினும், இராணுவ அதிகாரிகள் மக்கள் தம்மோடு நல்லுறவு காட்டுவதாகவே கூறினர். ஆனால் எனது கருத்து, 'யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டது என்று கூறுவதை விட, இன்னும் இராணுவ முற்றுகைக்கு உள்ளான நகரமாகவே உள்ளது' என்பதே யாகும்."

இவ்வாறு 1994 ஆனியிலும் 1997 செப்டெம்பரிலும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த யேர்மனிய அரசியல் ஆய்வு நிறுவன கலாநிதி பியட் பார்ட்டோல்ட் சமீபத்தில் கூறியுள்ளார். ✳

மறுபடியும் 1997 செப்டெம்பரில் நான் மீளவும் யாழ். நகர் கல்வி அமைப்புக்களை பார்வையிட்டேன். உத்தியோகபூர்வ அறிவித்தலின்படி யாழ்ப்பாணத்தில் எல்லாம் வழமைக்கு திரும்பிவிட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், எனது நேரடி அனுபவமோ முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.
அழிவுகளின் காட்சிகள் பயங்கரமானவை. எங்கு பார்த்தாலும் இடிபாடுகளின கோலம். மின்சாரம் வழங்கப்பட்டதாகக் கூறினாலும் மூன்றே மூன்று மின்குமிழ்கள் மட்டுமே வீடுகள் நெருக்கமான பகுதி ஒன்றில் எரிவதைக் கண்டேன். நான்கு தொலைபேசிகள் மட்டுமே அங்கு செயற்பட்டன. நகரம், சிறிலங்காவின் நகரங்களிலிருந்து துண்டிக்கப்பட்டே காட்சி அளித்தது. அரசு பல வாக்குறுதிகளை அளித்தபோதும், அவை எவையுமே நிறைவேற்றப்பட்டதாக இல்லை. என்னைத் திடுக்கிட வைத்த உண்மை என்னவென்றால், எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரே நின்றமை.

# யாழ் குடாநாட்டில் 600க்கு மேற்பட்ட தமிழர்கள் ....

இன்றி, 'விசாரணை' எனும் பெயரில் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி இனக்கொலைக்கு உள்ளாக்கப்பட்டு காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட உண்மையை, சர்வதேச மன்னிப்புச் சபையின் 1997 கார்த்திகை மாத 'அறிக்கை பகீரங்கப்படுத்தியுள்ளது.

அத்துடன், இவ்வாண்டின் முதல் அரை இறுதி ஆண்டு முடிவடைவதற்குள்ளேயே யாழ். குடாநாட்டில் 41 தமிழர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 தமிழர்களும் மன்னார் மாவட்டத்தில் 3 தமிழர்களுமாக மொத்தம் 60 தமிழர்கள் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையிடம் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருவதையும் சர்வதேச மன்னிப்புச் சபை ஏற்றுள்ளது. அத்துடன், கைதாக்கப்படுபவர்கள் குறித்து உறவினர்களுக்கு உரிய நேரத்தில் அறிவித்தல் கொடுக்கப்படுவது இல்லை எனவும் கைதாக்கப்படுவர்கள் எங்கே காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்ற விபரங்கள் வெளியிடப்படுவதில்லை என்பதையும் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை நிரூபித்துள்ளது.

இவை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் இயக்குனர், கடந்த ஐப்பசி மாதம் ஸ்கொட்லாண்ட் எடின்பரோ நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்த சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் நேரடிப் பேச்சுக்கள் நடாத்தியதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் ஆக்கிரமிப்புப் படைகளின் அடாவடித்தனங்களினால் இவ்வாண்டில் கைதாகி அநியாயமாக உயிரிழந்துள்ள தமிழ் மக்களில் 37 பேரினது விபரங்களும் மன்னிப்புச் சபையின் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு இந்தக் காணாமல் போனமைகள் குறித்து நீதி விசாரணைகள் நடாத்துவதில் காட்டும் தாமதப் போக்கையும் மன்னிப்புச் சபையின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. சிறிலங்கா படையினரின் இவ் தமிழினப் படுகொலைகள், சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு பாதுகாப்பும் அமைதியும் அளிப்பதில் அக்கறையின்றிக் காணப்படுவதை தெளிவாக்குகிறது.

இந்நிலையில், சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் வழங்கும் ஆற்றல் அற்ற அரசு என்பதை ஐக்கிய நாடுகள் சபை ஏற்று, உயிராபத்தில் உள்ள தமிழ் மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சிறிலங்கா ஆக்கிரமிப்பு படையினர் உடனடியாக விலக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல், சர்வதேச அமைப்புகளின் நீதியும் நேர்மையும் கேள்விக் குறியாவது மட்டுமல்ல, தமிழர்களின் இனஅழிப்புக்கான கூட்டுப் பொறுப்பாளி எனவும் நாளைய வரலாற்றால் விமர்சிக்கப்படக்கூடிய துர்ப்பாக்கிய நிலை தோன்றக்கூடும். ✳

# எதிரி தரும் சலுகையல்ல தேசவிடுதலை

"தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகையல்ல. அது இரத்தம் சிந்தி, உயிர் விலைகொடுத்து போராடிப் பெறவேண்டிய புனித உரிமை" என்பதை எங்கள் தேசத் தலைவர் பிரபாகரன் மாவீரர் நாளில் மக்களுக்கு நினைவுபடுத்தியுள்ளார். இது ஒரு முக்கியமான மேற்கோளாக மட்டுமல்லாது தமிழீழ மக்களதும் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் அவர்களது தேசிய விடுதலை இயக்கத்தினதும் உறுதியானதும் இறுதியானதுமான முடிவாகவும் உள்ளது. இந்த உயர்வான உன்னதமான எண்ணத்தை எங்கள் தலைவன் முதல் தமிழீழ பொதுமகன் வரை தன்னகத்தே கொண்டு திகழ்வதினால்தான் எங்கள் தேசத்தையும் எங்கள் மக்களையும் அடிமையாக்க எடுக்கப்படும் எத்தனையோ விதமான இராணுவ நடவடிக்கைகள், ஆக்கிரமிப்புக்கள் மட்டுமல்ல அரசியற் சதிகளும் நரித்தனமான பேச்சுவார்த்தை முயற்சிகளும் கூட முறியடிக்கப்பட்டு தமிழீழத் தேசிய விடுதலை போராட்டம் வெற்றி நோக்கி முன்னேறுகிறது. இந்த வரலாற்று உண்மையை மீளவும் தெளிவுபடுத்தக் கூடியவகையில் "இராணுவ அடக்குமுறைக் கொள்கையால் சிங்கள தேசம் தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கிறதே தவிர, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிட முடியாது" என நம் தேசத் தலைவன் ஆணித்தரமாக எடுத்தியம்பியுள்ளார்.

அதுமட்டுமல்ல, சிறிலங்காவின் இந்த அடக்குமுறை எண்ணம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல, வரலாற்றுத் தன்மையானது என்பதை எடுத்து விளக்கும் வகையில், "கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக அடக்குமுறை என்ற ஒரேவழியில்தான் சிங்களம் சென்று கொண்டிருக்கிறது. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையால் தான் இலங்கையில் அமைதி கலைந்து போகும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த அணுகுமுறையைச் சிங்கள தேசம் மாற்றிக் கொள்ளாவிடின் முடிவில்லா போரையும் பேரழிவையும் அது சந்திக்க வேண்டிவரும். இந்த அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து நிற்பது சிங்களப் பேரினவாதிகளேயன்றி நாமல்ல" எனக்கூறும் நம் தலைவன் அரச பயங்கரவாதத்தை தோற்றுவித்து, அதன் எதிர்விளைவுகளால் சிங்களம் சீரழிந்து கொண்டிருப்பதையும் அதைப் பொருட்படுத்தாது, மேலும் மேலும் குருட்டுத்தனமான முறையில் அடக்குமுறையையே தனது அரசியல் செயல்நெறியாக சிறிலங்கா வகுத்துச் செல்வதினால் தோன்றக்கூடிய பயங்கரமான எதிர்கால விளைவுகளையும் கோடிட்டுக் காட்டுகிறார்.

சிறிலங்காவின் அடுத்தவருட பாதுகாப்புச் செலவீனம் 45 பில்லியன் ரூபா என வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டு, போர் சிறிலங்காவால் ஆரம்பிக்கப்பட்டது முதல் 1994 ஆவணியில் சந்திரிகா அரசு பதவியேற்பதற்கு இடையில் செலவிடப்பட்ட ஆண்டுகால போர்ச் செலவையும் விட அதிகமான பணத்தை சந்திரிகா அரசு இந்த மூன்றாண்டு காலத்தில் செலவிட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, 1998ஆம் ஆண்டுக்கு செலவிட உத்தேசித்துள்ள தொகை மட்டும் போர் ஆரம்பமான முதல் ஏழரை ஆண்டுகால செலவையும் விட அதிகமாக உள்ளது. இலங்கைத்தீவின் மொத்த வழி உழைப்பில் 23 வீதத்தையும் மொத்த செலவீடுகளில் 13.5 வீதத்தையும் இந்த



1998ஆம் ஆண்டுப் பாதுகாப்புச் செலவீடு தனதாக்கிக் கொள்கிறது. இதனால்தான், சிங்கள தேசம் தனது அடக்குமுறைப் போக்கால் எவ்வாறு சீரழிகிறது – சீரழியப் போகிறது எனக் கூறிய நம் தலைவன், அத்துடன் நின்றுவிடாது ஐம்பது ஆண்டு காலமாக முடிவின்றி நீண்டு செல்லும் சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறையானது சந்திரிகாவின் கட்சிக் காலத்தில்தான் மிகவும் தீவிரமான கடும்போக்கை எடுத்தது எனலாம் என வர்ணித்துள்ளார். "சிங்களத்தின் ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக்காலம் எவ்வாறு தமிழினத்திற்கு சாபக்கேடாக அமைந்தது. இந்த மூன்றாண்டில் எவ்வாறு போர் விரிவடைந்து பெரும் தீயாக பரவி தமிழர் தேசத்தை சுட்டெரித்து அவலத்திற்கும் இம்சைக்கும் ஆளாகாத தமிழர்களே இல்லை என்னுமளவுக்கு நிலைமையை மோசமாக்கியுள்ளது என்பதையும் தலைவர் தெளிவாக விளக்கியுள்ளார். மக்களை இடம்பெயர்ந்து அல்லலுற வைத்து, அவர்கள் வரலாற்று புகழ்மிகு பாரம்பரிய நிலங்களை இராணுவ அடக்குமுறையாட்சிக்கு உட்படுத்தி, மாறிமாறி படையெடுப்புகளை நடத்துவதுடன் நில்லாது உணவு, மருந்து தடைகளால் மக்கள் பசியும் பட்டினியும், நோய்களும் சாவுகளுமாக வாழ்வைச் சந்திக்க வைக்கும் கொடுங்கோன்மையையும் சர்வதேச சட்டங்களுக்கு எதிரான நடைமுறைகளையும் சுட்டிக்காட்டிய தலைவர், "தமிழினத்தின் தேசிய சுதந்திர இயக்கமாகிய விடுதலைப் புலிகளை நசுக்கி தமிழினத்தை சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் அரசின் அடிப்படையான நோக்கம். இதற்காக முழுமுனைவோடு செயற்படுத்தும் இராணுவத் தீர்வை சர்வதேச உலகுக்கு மூடிமறைக்கும் – திசைதிருப்பும் மற்றொரு இராணுவ தந்திரோபாய முயற்சியே தீர்வுப்பொதி நாடகம் எனவும் எடுத்து விளக்கியுள்ளார். தமிழரின் தேசிய தனித்துவத்தையும் சிங்கள இறையாட்சியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவது தான் தீர்வு பொதியின் குறிக்கோள். இதுவே இராணுவத் தீர்வின் குறிக்கோளாகவும் உள்ளது. ஆக, மொத்தமாக சந்திரிகாவின் அரசியற் பொதியும் இராணுவத் திட்டமும் ஒரே நாணயத்தின் இரு முகங்களாகவே தெரிகின்றன என சந்திரிகா அரசின் செயற்பாடுகளை துல்லியமாக எடுத்து விளக்கிய தலைவர் பிரபாகரன், சமாதானப் புறாவாக பதவியேற்ற சந்திரிகா முன்வைத்துள்ள இரு போலிக் கருத்துக்களையும் எடுத்து விளக்கியுள்ளார். முதலாவதாக, "விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான வழியில் அரசியற் தீர்வை விரும்பியதால்தான் திம்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பல பேச்சுக்களில் கலந்து கொண்டோம். இப் பேச்சுக்களின்போது நாம் தமிழினத்தின் நலனில் உறுதியாக நின்றோம். சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்தன. இதனால், பேச்சுக்கள் வெற்றி பெறவில்லை – இதற்கு எம்மீது குறைகூறி பயனில்லை. சிங்கள அரசுகளின் விட்டுக்கொடுக்காத் தன்மையே இந் நிலைமைக்கு காரணம்." என விளக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிக்கு தடையாக உள்ளனர் என்பதையும் மறுத்துள்ளார். அடுத்து, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நீதியான சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடமில்லை. தமிழரின் தேசிய அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவும் சந்திரிகாவிடம் துணிவில்லை. இந்த இயலாமையை நியாயப்படுத்த தீவிர பேரினவாத சக்திகள் மீது பழியைச் சுமத்த முனைகிறது அரசு. உண்மையில் சந்திரிகாவின் அரசும் – சிங்கள பேரினவாதத்தின் ஒரு நவீன வடிவம்தான். சிங்கள பேரினவாதத்தை கட்டியெழுப்பி, அதனை பூதாகரமாக வளர்த்துவிட்ட சந்திரிகாவின் அரசியற்கட்சி, இப்பொழுது அந்த தீவீரவாத சக்திகள் மீது கறைகூறுவது அபத்தமானது எனக்கூறி சந்திரிகா அரசின் ஆற்றலின்மையை தெளிவாக்கியுள்ளார். சந்திரிகாவின் சமாதான முகமூடியை கிழித்தெறிந்துள்ளார்.

இறுதியாக, தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு – அமைதி வழங்கும் ஆற்றல் மட்டுமல்ல மனோநிலையும் கூட சந்திரிகா அரசுக்கு இல்லை என்பதை எடுத்து விளக்கும் வகையில் தமிழ் மக்களின் ஆன்ம வணக்கத்திற்குரிய மாவீரர்களின் புனிதத் தலங்கள் சின்னங்கள் அனைத்தும் யாழ்குடாநாட்டில் சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகளால் அழிக்கப்பட்டதை தாங்கொணா மனவேதனையுடன் தலைவர் எடுத்து கூறியுள்ளார்.

இந்நிலையில், தமிழர்கள் தங்கள் விடுதலையை போராடித்தான் எய்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு நிற்பதை தெளிவுபடுத்தும் தலைவர், நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடைய – எமது புனித மண்ணை தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப் படைகளை எமது மண்ணில் இருந்து விரட்டியடிக்க திடசங்கற்பத்துடன் தொடர்ந்து போராடு வோம் என ஆணித்தரமாக அசையா உறுதியுடன் ஆணையிட்டு நிற்கிறார். இது ஒவ்வொரு தமிழீழ மக்களதும் நெஞ்சத்து உறுதியின் வெளிப்பாடு. நாம் எங்கிருந்தாலும், எப்படி வாழ்ந்தாலும் நம் தலைவன் தலைமையில் நடைபெறும் தேச மீட்பு போரிற்கு மதியும் நிதியும், ஆக்கமும் ஊக்கமும் ,பரப்புரையும் புகழுரையும் அளிப்போம்! ✳

# வரலாற்று நாயகர்கள்

தமிழீழ விடுதலைப் போரில் தம் இன்னுயிர் நீத்த மாவீரர்களின் நினைவுநாள் இன்று. தமிழீழப் பிரதேசத்தின் பல பகுதிகளில் மிகவும் உணர்வெழுச்சியுடன் இம் மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இம் மாவீரர்களை தமிழ் இனம் உள்ளவரை நினைவுகூரும் என்பது நிச்சயமாகும். ஏனெனில், இம் மாவீரர்கள் தம் இனத்துக்காகவும் மக்களுக்காகவும் செய்த தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் மகத்தானவை. சிங்கள பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழித்து, அவர்கள் தாயகத்தை ஆக்கிரமிக்க பெரும் யுத்தமொன்றைத் தொடுத்தபோது அதனை எதிர்த்து நின்று தமிழ் மக்களின் பாதுகாப்புக் கவசங்களாக மாறி தம் உயிர் ஈந்தவர்களே இம்மாவீரர்கள். இவர்கள் தம் வாழ்நாளில் புரிந்த சாதனைகள் ஒப்புவமை அற்றவை. பெரும் அலையெனத் திரண்டு வந்த அச்சுறுத்தல்களை அல்லது பகைகளைக் கண்டு அவர்கள் என்றுமே அஞ்சியதில்லை. அவர்கள் கொண்டிருந்த மனோபலமும் உறுதியும் துணிவும் இவ் அச்சுறுத்தல்களை எல்லாம் மிஞ்சியதாக இருந்தது. தமது தாயகத்துக்கான போரில் தமது வாழ்வும் சாவும் ஒன்று என்றே அம்மாவீரர்கள் கருதினார்கள். தாம் என்றும் தமிழ் மக்கள் மனங்களில் மரணித்து விடப்போவதில்லை என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தனர். அதேசமயம் அவர்கள் தமது அபூர்வமான ஆற்றலினால் உலகத்தையும் வியப்பில் ஆழ்த்தினர். இவ்வாறான சாதனைகளை ஆற்றமுடியுமா? என்ற கேள்வியை எழ வைத்தனர். அர்ப்பணிப்பு, தியாகம் என்பவற்றிற்கு உலகில் வேறு எந்த மொழியிலும் காணமுடியாத, உதாரணம் தேட முடியாத அளவிற்கு இவர்கள் வாழ்வும் சாவும் உலகில் உயர்ந்து நிற்கின்றன. இவர்கள் தமது போராட்ட வாழ்வில் எதிர்த்து நின்றது சாமானியர்களை அல்ல. வெளிப்பார்வையில் இவர்கள் இருநாட்டு இராணுவங்களுடன் மோதி உள்ளனர். ஒப்பு ரீதியில் இவையிரண்டுமே ஆளணி மற்றும் தளபாட வசதிகளுடன் அரசியல், பொருளாதார பலம் பொருந்தியவை. இந்த ரீதியில் இவர்கள் தம்முடன் போரிட்டவர்களுடன் ஆளணி, தளபாட ரீதியில் ஒப்பிடக்கூடிய அளவு சமமானவர்களாக இருக்கவில்லை. இதனை இவர்களுடன் போரிட்ட இருதரப்புமே ஒப்புக்கொண்டுள்ளனர். இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பமானபோது கொழும்பிற்கான இந்தியத் தூதுவராக இருந்த ஜெ.என். டிக்ஷித், அன்று யுத்தம் தொடங்குமுன்னர் இந்திய இராணுவத்தால் விடுதலைப் புலிகளை இரு வாரங்களுக்குள் ஒடுக்கிவிடலாம் என்று இந்திய இராணுவத் தளபதிகள் நம்பியிருந்ததை அண்மையில் ஒப்புக்கொண்டார். இதனை அவர்கள் தமது ஆளணி, ஆயுத தளபாட அடிப்படையிலேயே கூறினர். இவ்வாறே சிறிலங்கா இராணுவ

> மாவீரர் நாள் தொடர்பாக
> தமிழீழத்திலிருந்து வெளியாகும்
> ஈழநாதம் பத்திரிகையில் எழுதப்பட்ட
> ஆசிரியர் தலையங்கம்

அரசியல் தலைமைகளும் ஒரு தடவை அல்ல பல தடவைகள் விடுதலைப் புலிகள் குறித்த தவறான மதிப்பீடுகளைச் செய்திருந்தன. இந்த வகையில் இறுதியாக அமைந்திருந்தது ஜெயசிக்குறு படை நடவடிக்கையாகும். ஒரு வகையில் சிறிலங்கா அரசின் இராணுவத் தலைமைப்பீடத்தின் ஒட்டுமொத்த மதிப்பீட்டை மட்டுமல்ல, உலகத்தின் மதிப்பீடுகளையும் மாற்றி அமைத்த பெருமை இம்மாவீரர்களையே சாரும். இவர்கள் புரிந்த மகத்தான அர்ப்பணிப்பு, சிங்கள பேரினவாதம் இனப்பிரச்சனையின் விவகாரத்தில் தனது சிந்தனைக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்றவிதத்தில் நடந்து செல்லத் தடைக்கற்களாக இருந்தது. மறுவளமாகக் கூறுவதானால், தமிழர் தாயகத்தையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக இம் மாவீரர்கள் தமது இன்னுயிர்களை வேலியாகப் போட்டார்கள். இந்த வகையில் இவர்கள் ஒடுக்குமுறையாளர்களின் மதிப்பீட்டை மாற்றிதோடு மட்டுமல்ல, இப்பிராந்திய வரலாற்றின் போக்கிலேயே மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்காக இவ்வரலாற்று நாயகர்கள் தமது இளவயது உறவுகளையும் இச்சைகளையும் அர்ப்பணிப்புச் செய்தனர். இவர்களின் இவ் அர்ப்பணிப்புக்கள் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வுக்காகவும் கௌரவத்திற்காகவுமே மேற்கொள்ளப்பட்டவையாகும். இந்த ரீதியில் மாவீரர்களின் இப்பணி தமிழ் மக்களினால் என்றுமே போற்றப்படவேண்டியதும், மதிக்கப்பட வேண்டியதும் ஆகும். ✳

# "குஜரால் அரசைக் கவிழ்க்க உருவாக்கப்பட்ட சதித்திட்டமே ஜெயின் அறிக்கை"

-பழ. நெடுமாறன்

**ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக அவசரம் அவசரமாக வெளியிடப்பட்ட ஜெயின் இடைக்கால அறிக்கை தொடர்பாக, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை.**

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் ராஜீவ் கொலை வழக்கில் சனவரி 28ஆம் திகதியன்று தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு 'ஜெயின்' கமிஷன் அறிக்கை வெளியிடப்படும் என்பதற்கு மாறாக, திடீர் என்று இடைக்கால அறிக்கையை ஜெயின் இந்திய அரசிடம் அளித்தார். முழு அறிக்கையும் இரண்டு மாதங்களில் வெளியிட இருக்கையில் இடைக்கால அறிக்கையை இப்போது வெளியிட வேண்டிய அவசியம் என்ன? அதிலும் இந்த அறிக்கையின் சில பகுதிகள் 'இந்தியா டுடே' இதழில் வெளியிடப்பட்டன. இதன் மூலம் இந்திய அரசுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அறிக்கையை உடனடியாக நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டிய அவசியம் உருவாக்கப்பட்டது.

முக்கிய சில கோப்புக்கள், ஆவணங்கள் தனது பரிசீலனைக்குத் தரப்படவில்லை என்று நீதிபதி ஜெயின் இந்திய அரசுமீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தார். மேலும், சில கோப்புக்கள் காணாமல் போய்விட்டன என்று முன்னைய காங்கிரஸ் ஆட்சி நீதிபதி ஜெயினுக்குத் தெரிவித்தது. இந்தக் கோப்புக்கள், ஆவணங்கள் இல்லாமல் சரியான முடிவை ஜெயின் எடுக்க முடியாது. ஆனால் இத்தகைய உண்மையான ஆதாரங்கள் எதுவுமில்லாமலே யூகத்தின்பேரில் நீதிபதி ஜெயின் தனது அறிக்கையை அளித்திருக்கிறார். முக்கிய ஆதாரங்களைத் தனக்குத் தராமல் மறைத்துவிட்ட முந்திய காங்கிரஸ் ஆட்சியையும் அதனுடைய உள்நோக்கத்தையும் பற்றி ஜெயின் கண்டனம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் கொலை வழக்கில் புலன்விசாரணை நடத்திய சி.பி.ஐயின் சிறப்புப் புலன் விசாரணைக்குழு, புலன் விசாரணை டைரியையும் மற்றும் சில ஆவணங்களையும் நீதிபதி ஜெயினுக்குத் தருவதற்கு கடைசிவரை மறுத்துவிட்டது. இதைப்பற்றியும் ஜெயின் தனது அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை.

மத்திய உள்துறை அமைச்சராக இருந்த எஸ்.பி. சவான் நாடாளுமன்றத்தில் பின்கண்ட திடுக்கிடும் தகவலைக் கூறினார்.

"ராஜீவ் குடும்பப் பெருமையைக் காப்பாற்றுவதற்காக சில கோப்புகளை நீதிபதி ஜெயினிடம் கொடுக்கவில்லை" என்று கூறினார். இதைப்பற்றியும் ஜெயின் கவலைப்படவில்லை.

இந்திய உளவுத்துறையான ஐ.பி க்கும் றோவுக்கும் இடையே புலிகள் விசயத்தில் கடும் போட்டா போட்டி நிலவியது. புலிகளுக்கு ஆதரவாக ஐ.பி யும், புலிகளுக்கு எதிராக றோவும் இந்திய அரசுக்குத் தொடர்ந்து அறிக்கைகள் தந்தன. இந்திய அமைதிப்படையின் தளபதிகளாகச் சென்ற லெப். ஜெனரல் தபீந்தர் சிங், மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே போன்றவர்கள் றோ மீது மிகக் கடுமையாக புகார் கூறியுள்ளார்கள். 'றோ' தந்த உளவுச் செய்திகள் நம்பகத் தன்மை வாய்ந்தவை அல்ல. இந்திய அரசு புலிகள் விசயத்தில் செய்த பல தவறுகளுக்கு 'றோ' உளவு அமைப்பின் தவறான ஆலோசனைகளே காரணம் என்று அவர்கள் தாங்கள் எழுதியுள்ள நூல்களில் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்கள். ஆனால், 'றோ' உளவுத்துறை சேகரித்த சில செய்திகளின் அடிப்படையில் நீதிபதி ஜெயின் முடிவுகளை எடுத்திருக்கிறார். றோ உளவுத்துறையின் தகவல்கள் உண்மையானவையா என்பதனை எந்த வகையிலும் அவர் சரிபார்க்கவில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

"விடுதலைப் புலிகளுடன் தமிழர்களுக்குள்ள நெருங்கிய உறவு தேசவிரோதப் போக்காகும்" என்றும் ஜெயின் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இது அவர் வகிக்கும் பதவிக்கு இழுக்கைத் தேடித் தந்துள்ளது. ராஜீவ் கொலைக்கு ஒட்டுமொத்தமாகத் தமிழர்கள் மீது அடாத பழியை அவர் சுமத்தியிருப்பது அவரின் நேர்மையைச் சந்தேகிக்க வைக்கிறது.

ராஜீவ் கொலை வழக்கில் தீர்ப்புச் சொல்லப்பட்ட பிறகுதான் உண்மையான குற்றவாளிகள் யார் என்பது வெளியாகும். இந்த நிலையில் சதியின் பின்னணியைப் பற்றி ஆராய்வதற்காக அழைக்கப்பட்ட ஜெயின், தேவையில்லாமல் வரம்புமீறிச் சென்று புலிகள் மீதும், தி.மு.க மீதும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திருக்கிறார்.

இந்த அறிக்கையும் அது வெளியிடப்பட்ட பின்னணியும் பலமான சந்தேகங்களைக் எழுப்பியுள்ளன. காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கிற குழப்பத்தின் விளைவாக இந்த அறிக்கை அவசர அவசரமாக வெளியிட வைக்கப்பட்டுள்ளது. சீத்தாராம் கேசரிக்கு எதிராக அர்ஜுன்சிங் போன்றவர்கள், சோனியாவை முன்னிறுத்திக் காங்கிரசைக் கைப்பற்ற முயற்சி செய்து வருகிறார்கள். ராஜீவ் கொலை பற்றிய பிரச்சினையை பெரிய அளவில் கிளப்பி, மக்களின் அனுதாபத்தைப் பெற சோனியா காந்தி பயன்படுவார் என இவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். மேலும் போபர்ஜ் ஊழல் விசாரனை முடியும் கட்டத்தில் உள்ளது. இந்த ஊழலில் சோனியாவின் உறவினர் குத்துரோச்சிக்கு உள்ள தொடர்பு ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்டு விட்டது. மேலும் சுவிஸ் வங்கி ரகசியக் கணக்கு விவரத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் சுவிஸ் அரசு இந்தியாவிற்கு அனுப்ப இருக்கிறது. எனவே அதற்குள் குஜரால் அரசைக் கவிழ்க்க வேண்டும் என்ற ஆழமான சதித்திட்டம் உருவாக்கப்பட்டு, அந்த அடிப்படையில் இப்போது பிரச்சினை கிளப்பப் பட்டிருக்கிறது.

ஜெயின் அறிக்கையைப் பயன்படுத்தி தி.மு.க வினைக் குற்றம்சாட்டும் காங்கிரசு தலைவர்கள், கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல் எறிகிறார்கள். ஈழத்தில் அமைதியை நிலைநாட்டு வதற்கென்று அனுப்பப்பட்ட இந்திய அமைதிப்படை 10,000 மேற்பட்ட தமிழர்களைப் படுகொலை செய்ததிற்கும், ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான தமிழர் சொத்துக்களை நாசம் செய்ததிற்கும் காங்கிரசு ஆட்சியே காரணமாக இருந்தது.

இந்திரா காந்தியின் கொலையையொட்டி டில்லியிலும், வடநாட்டின் பலபகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான சீக்கியர்கள் கொலை செய்யப்பட்டதற்குப் பின்னால் காங்கிரசு கட்சி இருந்தது.

இந்தக்கொலைகளுக்குக் காரணமாக இருந்த காங்கிரசு இப்போது தி.மு.க வை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தியிருக்கிறது. இந்தத் தைரியம் காங்கிரசுக்கு வருவதற்கு தி.மு.க. தலைமையின் தவறான போக்குத்தான் காரணமாகும் ,என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போபர்ஸ் விசாரணை இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் சி.பி.ஐ டைரக்டராக இருந்த ஜோகிந்தர் சிங் மாற்றப்படவேண்டும் அதன் மூலம் விசாரணைகட்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்ற நோக்கத்துடன்தான், அப்போதைய பிரதமர் தேவகௌடாவுக்கு எதிராகக் காங்கிரசு வரிந்து கட்டியது. அதன்படி அவர் மாற்றப்பட்டார். ஜோகிந்தர் சிங்கும் வேறு பணிக்கு மாற்றப்பட்டார். காங்கிரசின் நோக்கம் நிறைவேறியது. ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க வோ மற்றக் கட்சிகளோ போபர்ஸ் விசாரணை வேகமாக நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. காங்கிரசு தயவில் பதவியில் நீடித்தால் போதுமென்ற நிலையைக் கையாண்டனர். இதன் விளைவாக தேவகௌடாவின் இரத்தத்தைக் குடித்து ருசிகண்ட காங்கிரசுக் காட்டேறி தி.மு.க தலைவர் கருணாநிதியின் இரத்தத்தையும் குடிக்கத் துடிக்கிறது.

தமிழ் நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய இரண்டு கட்சிகளுடனும் மாறி மாறி கூட்டுச்சேர்ந்து அரசியல் ஆதாயம் அடைந்த காங்கிரசு கட்சி, இப்போது தி.மு.க மீது பழி சுமத்தி அரசியல் ஆதாயம் அடைவதற்கு முயல்கிறது. தி.மு.க. தலைவர் கருணாநிதி, காங்கிரசுக் கட்சியுடன் கொண்ட உறவின் விளைவாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். காங்கிரசுடன் எக்கால கட்டத்திலும் இனிக் கூட்டுச்சேர்வதில்லை என உறுதி எடுக்கவேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் உறுதியான, தடம்புரளாத நிலையைக் கருணாநிதி எடுத்திருந்தால் அவருக்கு இந்தக்கதி வந்திருக்காது. "ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டியது ஒவ்வொரு தமிழனின் நீங்காத கடமையாகும். அதைத்தான் நான் செய்தேன் என்று ஆணித்தரமாக அவர் கூறியிருக்கவேண்டும். மாறாக, மத்திய அரசு இந்த பிரச்சினையில் என்ன நிலையை எடுக்கச்சொன்னதோ அதைத்தான் நான் எடுத்தேன் என்று கூறியது அவருக்கு மட்டுமல்ல, தமிழ் இனத்திற்கே தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டது. தனக்கு ஆபத்து வரும்போது மட்டும் தமிழ் இனத்திற்கு ஆபத்து வந்துவிட்டது என்று கூப்பாடு போடுவதும், தமிழ் இனத்திற்கு ஆபத்து வந்தபோதெல்லாம் ஒதுங்கிநின்று வேடிக்கை பார்ப்பதும் இத்தகைய இக்கட்டான நிலைமையை அவருக்கு ஏற்படுத்திவிட்டது. ஆனாலும் தற்போது அடாத பழியைச் சுமத்தி தி.மு.க அரசைப் பதவிநீக்க காங்கிரசு செய்யும் முயற்சியை முறியடிக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

காங்கிரசு மற்றும் அகில இந்தியக் கட்சிகள் எதுவானாலும் தமிழர்களுக்கு விரோதமான கட்சிகளே என்ற விழிப்புணர்வு ஒவ்வொரு தமிழருக்கும் ஏற்படவேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

**பழ. நெடுமாறன்.**

## உயிருக்குப் போராடியவர்களை இராணுவத்திடம் ஒப்படைத்தவர்களுக்கும் கருணைகாட்டப்பட்டது

திருகோணமலை இறக்ககண்டியில் படகு விபத்தில் சிக்கி நீந்திக் கரைசேர்ந்த கடற்புலிகள் உறுப்பினர்களைத் தாக்கி, சிங்களப் படையினரிடம் ஒப்படைத்த சம்பவத்தோடு தொடர்புடையவர்களை விடுதலைப் புலிகள் சில மாதங்களுக்கு முன் கைது செய்தது அறிந்ததே. 36 முஸ்லீம்களும், 3 சிங்களவர்களும் இச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப் பட்டிருந்தனர். இவர்களில் 17 முஸ்லிம்களும் மூன்று சிங்களவர்களுமாக 20 பேர் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் 22.11.97 அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்ட இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. காந்தனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வன்னி வதிவிடப் பிரதிநிதி திரு. யோன் போல் அவர்களிடம் கையளிக்கப்பட்டனர். கடந்த வைகாசி மாதத்தில் 7 பேரும் பின்னர் 12 பேரும் ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட நிலையில் தற்போது மிகுதியாக இருந்த 20 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# ஐந்தாவது அரசியல் யாப்புக்கு அடித்தளம்போடும் நாலாவது அரசியல் யாப்பு!

"மலை வயிறு நொந்து எலியைப் பெற்ற கதை" என்றும் சொல்லலாம். அல்லது "உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை" என்றும் சொல்லலாம்.

இந்த இரண்டு பழமொழிகளுமே நீதி, அரசியல் யாப்பு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சிறிலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கும் புதிய அரசியல் யாப்பு பற்றி கருத்து வெளியிடுவதற்குப் பொருத்தமாக இருக்கும்.

1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதிதான் அரசு முதன் முதலாக அரசியல் பரவலாக்கல் யோசனைகளை (நகல்) வெளியிட்டது.

அதன் பின் கடந்த 27 மாதங்களாக இந்த யோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் விவாதிக்கப்பட்டு வந்து இருக்கின்றது.

இப்போது மட்டுமல்ல, இதற்கு முன்னரும் "நகல் அரசியல் யாப்புத்

**- நக்கீரன் -**

திட்டம்" நீதி, அரசியல் யாப்பு அமைச்சர் பீரிசினால் வெளியிடப்பட்டிருந்தது. கடந்த மார்ச்சு மாதம் 27ஆம் திகதி வெளிமிடப்பட்ட அந்த நகல் யாப்பில், 'அதிகாரப் பரவலாக்கல்' பற்றிய 15வது அதிகாரம் வெளியிடப்படவில்லை. இப்போது அந்த அதிகாரம் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் அரசியல் யாப்பே, அதி உச்சக் கட்டமாகக் கணிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல், அந்த அரசியல் யாப்பே அந்த நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கான கனபரிமாணத்தையும் நிர்ணயிக்கிறது.

சுருங்கச் சொல்லப் போனால், ஒரு நாட்டின் தலைவிதியை அந்த நாட்டின் அரசியல் யாப்பே நிச்சயப்படுத்துகிறது.

ஆன காரணத்தினால்தான் அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு ஆண்டுக்கணக்கில் நேரம் ஒதுக்கப்படுகிறது.

சாதாரண சட்டங்களுக்கு திருத்தங்கள் அடிக்கடி கொண்டுவரப்படலாம். அப்படியான திருத்தங்களுக்கு சாதாரண பெரும்பான்மை போதும்.

அரசியல் யாப்பு எந்தவித பெரிய மாற்றத்தையும் பெறவில்லை.

அரசியல் யாப்புக்கு இருபத்தி ஐந்துக்குக் குறைவான திருத்தங்களே செய்யப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் யாப்பு நாற்பத்தியேழு ஆண்டுகள் மட்டும் பழமை வாய்ந்தது.

இப்போதுள்ள அரசியல் யாப்பு 1950ஆம் ஆண்டு சனவரி 26ஆம் திகதி அமுலுக்கு வந்தது.

அமெரிக்காவைப் போலவே இந்திய அரசியல் யாப்பும் கடந்த நாற்பத்தியேழு ஆண்டுகளில் மிகக்குறைந்து மாற்றத்தையே கண்டுள்ளது.

இதற்கு ஒரு காரணம் யாப்பு திருத்தப்பட வேண்டுமென்றால் மேற்சபை, கீழ்சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். அத்தோடு பாதிக்கு மேற்பட்ட மாநிலங்களின் ஒப்புதலும் வேண்டியிருக்கும்.

ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கு அரசியல் யாப்பு எப்படி அச்சாணியாக விளங்க முடியும் என்பதை எடுத்துக் காட்டவே அமெரிக்க, இந்திய அரசியல் யாப்புகளை உதாரணம் காட்டினேன்.

அமெரிக்க இந்திய நாட்டு யாப்புகளோடு சிறிலங்கா நாட்டு அரசியல் யாப்பை ஒப்பு நோக்கினால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை தெரியவரும்.

சுமார் ஐம்பது ஆண்டுகளில் சிறிலங்கா நான்கு அரசியல் யாப்புகளுக்கு முகம் கொடுத்ததைப் பார்க்கலாம்.

இதில் இரண்டு அற்ப ஆயுளில் தங்கள் கதையை முடித்துக் கொண்டன.

1946இல் அமுலுக்கு வந்த சோல்பரி யாப்பு 1972இல் இறந்துபட, 1972இல் அமுலுக்கு வந்த சுதந்திரக் கட்சியின் யாப்பு 1978இல் உயிரை விட்டது.

இப்போது 1978இல் கொண்டு வரப்பட்ட ஜே.ஆரின் அரசியல் யாப்பு உயிர் போகும் நிலையில் சேடம் இழுத்துக்கொண்டிருக்கிறது.

இந்த அரசியல் யாப்பு மாற்றங்கள், சிறிலங்காவின் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த அரசியல் கட்சிகளினதும் அரசியல் வாதிகளதும் அரசியல் ஞான சூனியத்தையும் அரசியல் சந்தர்ப்பவாதத்தையும்

> **"வடக்கும் - கிழக்கும் தமிழ் மக்களது தாயக பூமி" என்ற கோட்பாட்டை முன்னைய யாப்புக்களை விட இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய யாப்பு முற்றாக நிராகரிக்கிறது.**

அரசியல் யாப்பு அப்படியல்ல. அதன் ஆயுள் கெட்டியாக இருக்க வேண்டும். அரசியல் யாப்புக்கு திருத்தங்கள் கொண்டுவருவதற்கு சிக்கலான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கும். பொதுவாக அப்படியான திருத்தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படும்.

அமெரிக்க நாட்டு அரசியல் யாப்பு 1787ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இருநூற்றிப்பத்து ஆண்டு பழமை வாய்ந்தது.

இந்தக் காலகட்டத்தில் அமெரிக்க நாட்டு

அரசியற் தீர்க்கதரிசனமின்மையையும் எடுத்துக் காட்டுகின்றது என்று சொன்னால் அது கொஞ்சமும் மிகையாகாது.

1972ஆம் ஆண்டு 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்கள் தமிழ் மக்களது ஒப்புதலை பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு யாப்புக்களும் நாட்டு மக்கள் அனைவரினதும் அபிலாசைகளைப் பிரதிபலிக்கத் தவறியது மட்டுமல்ல, சிங்கள பௌத்த பேரினவாதத்தைப் பேணிக்காக்கவும் பிரயத்தனம் செய்தன.

∴பௌத்த மதத்திற்கு அரசமத அந்தஸ்து

∴சிங்களம் அரசமொழி

∴சிங்கக்கொடியே தேசியக்கொடி

∴நமோ நமோ மாதாவே தேசியகீதம்

இவற்றையே இந்த இரண்டு யாப்புக்களும் ஏற்றிப் போற்றிப் பாதுகாப்பு அளித்தன.

தமிழ் மக்களது உரிமைகளும், அபிலாசைகளும் முற்றாக புறக்கணிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய இனம் அவமதிக்கப்பட்டது.

துரதிட்டவசமாக இப்போது கொண்டு வரப்பட்டுள்ள புதிய யாப்பும் அதற்கு முந்திய யாப்புக்கள் போலவே சிங்கள - பௌத்த மேலாண்மையைத் திணிப்பதாக உள்ளது.

1946, 1972, 1978 ஆண்டு யாப்புக்கள் ஒற்றையாட்சியை வலியுறுத்தின.

கலைக்கும் அதிகாரம் உட்பட ஏனைய அதிகாரங்கள் அடிப்படையான ஒரு அரசியல் அமைப்பையே சுட்டிக்காட்டுகிறது.

சந்திரிகா அரசினால் 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் பரவலாக்கல் யோசனைகளில் பிரதேச ஆட்சியைக் கலைக்கும் உரிமை மத்திய அரசுக்கு இல்லாதிருந்தது என்பதை இங்கு நினைவு படுத்த வேண்டும்.

மேலும், "வடக்கும் - கிழக்கும் தமிழ் மக்களது தாயக பூமி" என்ற கோட்பாட்டை முன்னைய யாப்புக்களை விட இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய யாப்பு முற்றாக நிராகரிக்கிறது.

1978ஆம் ஆண்டு யாப்புக்கு 1987இல்

> **ஒரு நாட்டின் அரசியல் யாப்பே, அதி உச்சக் கட்டமாகக் கணிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல், அந்த அரசியல் யாப்பே அந்த நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கான கனபரிமாணத்தையும் நிர்ணயிக்கிறது.**
>
> **சுருங்கச் சொல்லப் போனால், ஒரு நாட்டின் தலைவிதியை அந்த நாட்டின் அரசியல் யாப்பே நிச்சயப்படுத்துகிறது.**

குறிப்பாக 1972, 1978ஆம் ஆண்டு யாப்புக்கள் சிறிலங்கா குடியரசு ஒற்றையாட்சியரசு (unitary state) என்பதைத் தெளிவு படுத்தியது. இப்போது ஒற்றையாட்சியரசு என்பது, நேரடியாக குறிக்கப்படாமல் சுற்றி வளைத்துச் சொல்லப்படுகிறது.

சிறிலங்கா இறைமையுள்ள குடியரசாகும். அது சிறிலங்காக் குடியரசு என அழைக்கப்படும். சிறிலங்கா குடியரசு கலைக்க முடியாத பிரதேசங்களது ஒன்றியமாக இருக்கும். (The Republic of Sri Lanka shall be an indissoluble union of regions).

எந்தவொரு பிரதேச ஆட்சியும், அல்லது பிரதேச ஆட்சிகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்தவோ எத்தணிக்கவோ முடியாது.

அ). சிறிலங்கா குடியரசில் இருந்து எந்தப் பிராந்தியமோ, பிராந்தியங்களோ பிரிய முடியாது.

ஆ) பிராந்தியத்தின் பிரதேசத்தை மாற்ற முடியாது.

இ) பிராந்தியத்தின் பெயரை மாற்ற முடியாது.

ஈ) ஒன்றுக்கு மேற்பட்ட பிராந்தியங்கள் ஒன்று சேரமுடியாது.

இதற்கு மேலாக தேசிய ஒருமைப்பாட்டிற்கு அபத்து ஏற்படலாம் என சனாதிபதி நினைத்தால் பிரதேச ஆட்சி கலைக்கப்பட்டு, சனாதிபதியின் நேரடி ஆட்சி உருவாக்கப்படும்.

எனவே புதிய யாப்பு, ஒற்றையாட்சி யாப்பாக இருக்கும் என நேரிடையாகச் சொல்லாவிட்டாலும் பிரதேச சபையைக்

கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களது வதிவிடம் என்பதை ஒப்புக்கொண்டதோடு வடக்கையும் - கிழக்கையும் தற்காலிகமாக இணைத்ததை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

புதிய யாப்பு கிழக்கு மாகாணத்தை தமிழர், முஸ்லீம்கள், சிங்கள வர்களுக்கிடையில் துண்டு போட வழி வகுக்கிறது.

இதன் மூலம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் விழுங்கப்பட்ட தமிழர்களது தாயகபூமி நிரந்தரமாகப் பறிபோவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க பௌத்த மதத்திற்கு முன்னைய யாப்புகளில் அளிக்கப்பட்ட அந்தஸ்தை விட கூடிய அந்தஸ்து இப்போது வழங்கப்பட்டுள்ளது.

சனநாயகத்தில் குடிமக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி ஒத்த ஒரிமையோடும் ஒத்த அந்தஸ்தோடும் "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை" என்ற கோட்பாடு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

இதற்கு அரசு மதச்சார்பில்லாத அரசாக இருப்பது அவசியமாகும்.

பல முஸ்லீம் நாடுகள் நீங்கலாக ஏனைய நாடுகள் மதச்சார்பில்லாத கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றன.

இந்தியா இதற்கு நல்ல உதாரணம். இந்தியாவில் இந்துக்களின் விகிதாசாரம் 85 வீதத்திற்கும் மேலாக இருந்தும் இந்தியா தன்னை ஒரு மதச்சார்பில்லாத நாடாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

தொடர்ச்சி 13ம் பக்கம்...

# தோல்வியுற்ற அணுகுமுறையும் அரசாங்கத்தின் கால இழுத்தடிப்பும்

இனப்பிரச்சினைக்கு இவ்வாண்டுக்குள் தீர்வு எதுவும் காணப்படமாட்டாது என்பது தற்பொழுது உறுதி செய்யப்பட்டதொன்றாக மாறியுள்ளது. இவ்வாண்டின் ஆரம்பத்தில் இருந்தே சந்திரிகா அரசாங்கம் ஆண்டின் இறுதிக்குள் பிரச்சினைக்கு இராணுவ அரசியல் ரீதியிலான இருவகை அணுகுமுறை மூலம் தீர்வு காணப்படும் என்றே கூறிவந்தது. ஆனால் தற்பொழுது இது சாத்தியமாகாது என்பது நிரூபணமாகியுள்ளது. சந்திரிகா அரசாங்கம் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இவ்வுறுதிமொழிகளை வழங்கியபோது யுத்தமானது திட்டவட்டமாக

முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்ற பூரண நம்பிக்கையுடன் இருந்தது. ஏற்கனவே எழுபது (70) வீதமான போர் முடிவடைந்துவிட்டது என்று கருதிய சிறிலங்கா அரசாங்கம் வவுனியா கிளிநொச்சிக்கான தரைவழிப்பாதை இவ் வாண்டுக்குள் திறக்கப்படுவதோடு, யுத்தம் முடிவடையும் எனக் கருதியது. இந்த நிலையில் மே 13 இல் இப்பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கையை சிறிலங்கா அரசாங்கம் ஆரம்பித்தது. ஆகக்கூடியதாக இரண்டு மாதங்களுக்கு திட்டமிட்ட இராணுவ நடவடிக்கையானது, தற்பொழுது ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும்

> கடந்த ஆறு மாதங்களாக தொடரும் ஜெயசிக்குறு நடவடிக்கையானது, போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்பதை மட்டுமல்ல, தரைவழிப்பாதை திறந்தால் கூட அதனைத் தக்கவைக்க முடியுமா என்ற சந்தேகத்தைக் கூட இராணுவத்தரப்புக்கு ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாண்டின் இறுதிக்குள் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

அத்தோடு இவ்வாண்டின் இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவரப்பட முடியாது என்பதையும் உறுதி செய்துள்ளது. மேலும், கடந்த ஆறு மாதங்களாக தொடரும் ஜெயசிக்குறு நடவடிக்கையானது, போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்பதை மட்டுமல்ல, தரைவழிப்பாதை திறந்தால் கூட அதனைத் தக்கவைக்க முடியுமா என்ற சந்தேகத்தைக் கூட இராணுவத் தரப்புக்கு ஏற்படுத்தியுள்ளது. இதனைப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவே ஊர்ஜிதம் செய்தும் உள்ளார். இவற்றின் மூலம் விடுதலைப் புலிகளின் பலம் குறித்து சிறிலங்கா அரசாங்கம் ஏற்கனவே கொண்டிருந்த தப்பான மதிப்பீட்டை தற்பொழுது ஓரளவு புரிந்து கொண்டதாகவே உணர முடிகிறது. இதன் காரணமாகவே யுத்தம் முடிவடைவதற்கான கால நிர்ணயத்தை சனாதிபதி சந்திரிகாவும் இராணுவத் தளபதியும் தள்ளிவைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறாக இனப்பிரச்சினைக்கு எடுத்துவந்த ஒருவழி தடைப்பட்ட

அதேவேளை, மறுவழியாக அரசியல் தீர்வு என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் திட்டமும் முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளது. அதாவது, அரசியல் யாப்பினைத் திருத்தி அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தில் அதனால் முன்னேற்றம் காணமுடியவில்லை. ஏனெனில், அரசியல் யாப்பை மாற்றி அமைப்பதற்கான ஒத்துழைப்பை எதிர்க்கட்சியிடமிருந்து ஆளும்

பதில் நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை மட்டுமே சமர்ப்பிக்க முடிந்துள்ளது. இந்த ரீதியில் சந்திரிகா அரசாங்கத்தின் இருவழி அணுகுமுறையும் ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது என்றே கூறலாம். இந்த நிலையானது, சந்திரிகா அரசாங்கம் இவ்வாண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வென கைக்கொண்ட இருவழி அணுகுமுறையில் தோல்வி

> அரசியல் யாப்பை மாற்றி அமைப்பதற்கான ஒத்துழைப்பை எதிர்க்கட்சியிடமிருந்து ஆளும் கட்சியினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதாவது அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான விடயத்தில் எதிர்க்கட்சியுடன் ஆளும் கட்சியானது உடன்பாட்டிற்கு வரமுடிய வில்லை. இதன் காரணமாக ஒன்றரை வருடங்களுக்கு மேலாகக் கூடிய பாராளு மன்றத் தெரிவுக் குழு பலன் ஏதும் அற்ற நிலையையே கண்டுள்ளது.

கட்சியினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதாவது அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான விடயத்தில் எதிர்க்கட்சியுடன் ஆளும் கட்சியானது உடன்பாட்டிற்கு வரமுடியவில்லை. இதன் காரணமாக ஒன்றரை வருடங்களுக்கு மேலாகக் கூடிய பாராளுமன்றத் தெரிவுக் குழு பலன் ஏதும் அற்ற நிலையையே கண்டுள்ளது. ஆளும்கட்சியினால் புதிய அரசியல் யாப்பு மசோதாவிற்குப்

கண்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது. ஆனால், இதற்கான இவ்வழி முறையில் அடுத்த ஆண்டிலாவது வெற்றி பெறலாம் என சந்திரிகா அரசாங்கம் முனையுமானால், அதிலும் நிச்சயம் தோல்வியையே சந்திக்கும். ஏனெனில், அரசாங்கத்தின் இவ்வணுகுமுறை எவ்வேளையிலும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொருத்தமான வழிமுறையாக இருக்க மாட்டாது. ✷

# பன்றியுடன் கூடிய கன்றும்.....?

அமைச்சர் பேராசிரியர் பீரிசும், தமக்கு வழங்கப்பட்ட இரு பொறுப்புகளுக்காகத் தமது முன்னைய தகுதியை முற்றாக மறந்துவிட்டார் என்று கருத வைக்கின்றார். இந்த அமைச்சுக்களுக்காக அமைச்சர் பீரிஸ் தாம் ஒரு பேராசிரியர் என்பதையோ, அன்றி முன்னாள் துணைவேந்தர் என்பதையோ, அன்றி புத்திஜீவிகள் வரிசைகளில் சேர்த்துக்கொள்ளத்தக்கவர் என்பதையோ மறந்து அல்லது கைவிட்டு தன்னை ஒரு அரசியல்வாதியாக மட்டுமே நிலைநிறுத்த முற்படுகின்றார். இன்றைய சிறிலங்கா அரசியலில்

நடத்தும் யுத்தத்திற்கான பெரும்நிதி ஒதுக்கீடு செய்யும் நிதி அமைச்சின் பிரதி அமைச்சர் பொறுப்பாகும். ஒரு வகையில் இந்த இரண்டு விவகாரங்களுமே இன்றைய சிறிலங்கா அரசியலின் அடிப்படைப் பிரச்சினையாகும். இந்த நிலையில் இவை இரண்டு தீர்வுகளுமே சந்திரிகா குமாரதுங்கவின் அரசியலைத் தீர்மானிக்கக் கூடியதாகவும் உள்ளன. ஆகையினால் அமைச்சர் பீரிஸின் பங்கும் பெரிதாகவே உள்ளது. இந்த நிலையில்தான் இரண்டு பணிகளையும் முன்னெடுத்துச்

> அரசியல் யாப்பு குறித்து அரசியல் அரைகுறை அறிவிப்புக்கள் வெளியாகிய போதும் இன்னமும் முழுவடிவம் பெறவில்லை என்றே கூறலாம். அதிலும் குறிப்பாக இந்த அரசியல் யாப்பில் இடம்பெறும் அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் இன்னமும் இறுதித் தீர்மானம் ஒன்றை அமைச்சர் பீரிஸினால் எட்ட முடியவில்லை. எட்டமுடியும் என்பதற்கான சூழ்நிலை இருப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு ஒத்துழைப்பதற்கான சூழ்நிலை இருப்பதாக இல்லை.

பேராசிரியர் பீரிஸிடம் இரண்டு முக்கிய அமைச்சுக்கள் உள்ளன. ஒன்று, இன்றைய சிறிலங்கா அரசியலில் யுத்தத்திற்கு அடுத்ததாக முக்கியமானதாகவிருக்கும் அதிகாரப் பரவலாக்கல் உட்பட அரசியல் யாப்பு சீர்திருத்த விவகாரம். இரண்டாவது, சிறிலங்கா

செல்பவராகவும் அதனை நியாயப்படுத்துபவராகவும் அமைச்சர் பீரிஸ் உள்ளார். இந்த வகையில் அதிகாரப்பரவலாக்கல் திட்டம் உட்பட புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதில் அவர் முனைப்பாக ஈடுபட்டுள்ளார். ஏற்கனவே இந்த அரசியல் யாப்பு குறித்து அரசியல்

அரைகுறை அறிவிப்புக்கள் வெளியாகிய போதும் இன்னமும் முழுவடிவம் பெறவில்லை என்றே கூறலாம். அதிலும் குறிப்பாக இந்த அரசியல் யாப்பில் இடம்பெறும் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் இன்னமும் இறுதித் தீர்மானம் ஒன்றை அமைச்சர் பீரிஸினால் எட்ட முடியவில்லை. எட்ட முடியும் என்பதற்கான சூழ்நிலை இருப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு ஒத்துழைப்பதற்கான சூழ்நிலை இருப்பதாக இல்லை. ஆனால், அமைச்சர் பீரிஸ் தான் எடுத்துக்கொண்ட விடயத்தை முடித்தே தீருவதென பேசிக் கொண்டிருக்கிறார். அவர் அரசியல் சூழ்நிலையையோ அன்றி நடைமுறையில் அரசியல் யாப்பையோ கருத்திற் கொள்ளாது ஒரு முழுமையான அரசியல்வாதி போல் பேசுவதாகத் தெரிகின்றது. ஏனெனில் ஒரு அரசியல்வாதியைத் தவிர, இன்றைய சூழ்நிலையைப் பகுப்பாய்வு செய்யாது எவருமே புதிய அரசியல் யாப்பையோ அன்றி அதில் அடங்கும் அதிகாரப் பரவலாக்கல்களையோ நிறைவேற்ற முடியும் என மனசுத்தியுடன் பேச முடியாது. அடுத்ததாக, சிறிலங்கா வரவு செலவுத் திட்டத்தின் பெரும்

தொகை நிதியை விழுங்கி வரும் யுத்தம் விரைவில் முடிவிற்கு வரும் என்பதும் இதனால் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் தொகை நிதி ஒதுக்கப்படும் என்ற பேச்சுமாகும். அதாவது,

இழப்பும் அதன்பின்னர் தீவிரமாகியதே ஒழிய குறையவில்லை. இதேபோன்று வரவு செலவுத் திட்டத்தில் யுத்தச் செலவு அதிகரித்தே வந்துள்ளது. இந்த நிலையில் ஜெயசிக்குறு நடவடிக்கை முடிவானது யுத்தத்தின் முடிவாகவோ

> இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாண முடியும் எனவும் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பினை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியும் என்றும் ஒரு அரசியல்வாதி பேச முடியுமே ஒழிய, ஒரு புத்திஜீவியின் பேச்சாக ஒருபோதுமே இருக்கமாட்டாது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாண முடியும் எனவும் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பினை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியும் என்றும் ஒரு அரசியல்வாதி பேச முடியுமே ஒழிய, ஒரு புத்திஜீவியின் பேச்சாக ஒருபோதுமே இருக்கமாட்டாது. ஆனால் யுத்தம், ஜெயசிக்குறு நடவடிக்கை முடிவடைவதுடனோ அன்றி அதன் பின்னர் இராணுவம் ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலமோ முடிவடைந்துவிடப் போவதில்லை. 'ரிவிரச' நடவடிக்கை முடிந்த போதும் இதுவே கூறப்பட்டு வந்தது. ஆனால், யுத்தமும்

அல்லது யுத்தச் செலவைக் குறைக்க ஒரு சந்தர்ப்பத்தை வழங்கவோ மாட்டாது.

இந்த நிலையில் அமைச்சர் பீரிஸ் தனது அமைச்சுப் பொறுப்புக்களாக எதைப் பேசிவரினும் அவர் கூறுவது எதுவுமே சிறிலங்கா யதார்த்த அரசியலைப் பிரதிபலிப்பதாக இருக்க மாட்டாது. மாறாக அவருடைய புத்திஜீவதனத்தை மதிப்பீடு செய்வதாகவே இருக்கும். மறுவளமாகக் கூறுவதானால், "பன்றியோடு சேர்ந்த கன்றும்........" போன்றே அவரும் மாறிவிட்டதை வெளிக்காட்டுவதாவே இருக்கும். ✷

# இராணுவ நடவடிக்கைகளும் அவற்றின் விளைவுகளும்

தமிழரின் இனப்பிரச்சனையை அரசியல் வழிமுறைகள் மூலம் தீர்க்க என்று கூறிக்கொண்டு, சிறிலங்கா அரசு எத்தனை பேச்சுவார்த்தைகளை நடாத்தி முடிவில்லாமல் முடித்தது என்ற விபரம் தமிழ் மக்கள் அறிந்ததே.

அதுபோல, தமிழரின் இனப்பிரச்சனையை இராணுவ வழியில் தீர்க்க விரும்பி எத்தனையோ இராணுவ நடவடிக்கைகளை, ஒன்றின் பின் ஒன்றாக, சிறிலங்கா அரசு செய்து வருகின்றது.

ஒவ்வொரு பேச்சுவார்த்தையையும் சிங்கள அரசாங்கங்கள் முறிக்கும் போது அல்லது முறிக்கும் சூழலை ஏற்படுத்தி முறிப்பிக்கும் போது, தமிழரின் விடுதலைப் போராட்டம் ஒரு படி வளர்ச்சி நிலையை அடைவது போல, ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையையும் சிங்களப் படைகள் நடாத்தி முடித்த பின்பும், தமிழரின் விடுதலைப் போராட்டம் தீவிர நிலையை அடைவது இலங்கையின் அரசியல் வரலாறாகும்.

சில இராணுவ நடவடிக்கைகள் மூலம் சிங்களப்படைகள், எமது பட்டணங்களை-ஊர்களை ஆக்கிரமித்துள்ளன. ஆயினும் அரசியல் ரீதியிலும் - இராணுவ ரீதியிலும் தமிழரின் விடுதலைப் போராட்டம் வீரியம் பெற்றபடி முன்னேறிச் செல்கின்றது என்ற உண்மையை சிங்கள அரசாங்கங்கள் காணத் தவறுகின்றன.

தமிழீழத்தின் வடபோரரங்கிலும் - தென் போரரங்கிலும், இது வரை 40இற்கும் மேற்பட்ட இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு நடாத்தி முடித்துள்ளது. தான் நடத்தும் இராணுவ நடவடிக்கைகளுக்கு, பெரும்பாலும் பெயர் சூட்டி அடையாளப்படுத்துவது சிறிலங்கா அரசின் ஒரு வழமை. இதில் சில இராணுவ நடவடிக்கைகள் சமர் என்ற வகைக்குள் அடக்கக்கூடிய அளவுக்கு அவற்றின் இராணுவ பரிமாணங்கள் அமைந்துள்ளன. (இந்திய-புலிகள் போர் இடம் பெறவில்லை) அத்தகைய முக்கிய சமர்களை நாங்கள் இங்கே பட்டியலிட்டுள்ளோம்.

ஒவ்வொரு சமரும் எத்தனை நாட்கள் நடந்தன?

இராணுவ தரப்பு உயிரிழப்பு என்ன?

புலிகள் தரப்பு உயிரிழப்பு என்ன? என்ற விபரங்களை இங்கே தொகுத்துள்ளோம். (அட்டவணை 1) குறிப்பிட்ட இந்த இராணு நடவடிக்கைகள் எப்போது தொடங்கின? எப்போது முடிவுக்கு வந்தன? என்ற தகவல்களையும் இங்கே தொகுத்துள்ளோம். (அட்டவணை 2)

| இராணுவ நடவடிக்கையின் பெயர் | நடைபெற்ற நாட்கள் | படையினரின் உயிரிழப்பு | புலிகளின் வீரச்சாவு | (இருதரப்பு) நாள் ஒன்றுக்கு சாவு வீதம் |
|---|---|---|---|---|
| 1. ஆ.க.வெ/பலவேகய | 31 | 400 | 602 | 32 |
| 2. மின்னல் | 29 | 300 | 233 | 18 |
| 3. யாழ்தேவி | 07 | 150 | 88 | 34 |
| 4. சூரியக்கதிர் | 49 | 750 | 438 | 24 |
| 5. சத்ஜய | 70 | 700 | 254 | 13 |
| 6. ஜயசிக்குறுய் | 145 + | 1400 + | 662 + | 15 |

அட்டவணை I

| இராணுவ நடவடிக்கையின் பெயர் | ஆரம்ப நாள் | முடிவு நாள் |
|---|---|---|
| 1. ஆ.க..வெ/பலவேகய | 10.07.1991 | 09.08.1991 |
| 2. மின்னல் | 29.08.1991 | 26.09.1991 |
| 3. யாழ்தேவி | 28.09.1993 | 04.10.1993 |
| 4. சூரியக்கதிர் | 17.10.1995 | 05.12.1995 |
| 5. சத்ஜய | 26.07.1996 | 03.10.1996 |
| 6. ஜயசிக்குறுய் | 13.05.1997 | தொடர்கின்றது |

அட்டவணை II

இராணுவ நடவடிக்கைகளில் இரு தரப்பிலும் ஏற்படும் ஆள் இழப்பு வேறுபாடுகளைப் பொறுத்த வகையில் புலிகளை விட, படையினரின் உயிரிழப்பே அதிகமாக இருப்பதைக் காணலாம். சில சமர்களில் இந்த வேறுபாடு இரண்டுக்கு ஒன்று அல்லது மூன்றுக்கு ஒன்று என்ற வீதத்தில் முறையே படையினரதும் புலிகளினதும் இறப்புவீதம் இருப்பதைக் காணலாம்.

> **ஒவ்வொரு பேச்சுவார்த்தையையும் சிங்கள அரசாங்கங்கள் முறிக்கும்போது அல்லது முறிக்கும் சூழலை ஏற்படுத்தி முறிப்பிக்கும்போது, தமிழரின் விடுதலைப் போராட்டம் ஒருபடி வளர்ச்சி நிலையை அடைவது போல, ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையையும் சிங்களப்படைகள் நடாத்திமுடித்த பின்பும், தமிழரின் விடுதலைப் போராட்டம் தீவிரநிலையை அடைவது இலங்கையின் அரசியல் வரலாறாகும்.**

படையினரைவிட, புலிகளுக்கு அதிகளவு உயிரிழப்பு ஏற்பட்ட சமராக, ஒரே ஒரு சமரை மட்டுமே குறிப்பிடலாம். 'பலவேகய' என்று எதிரி பெயர் சூட்டிய ஆ.க.வெ. சமரே அதுவாகும். இந்தச் சமரில் 602 போராளிகள் வீரச்சாவடைந்தனர். படையினரில் 400 பேரே கொல்லப்பட்டிருந்தனர். புலிகள் சந்தித்த முதலாவது மரபுவழிச்சமர் என்ற முக்கிய காரணத்துடன் - வெட்டவெளியில் கவசங்கள் அற்று நடந்த ஒரு சமர் என்பதாலும் புலிகள் அதிக இழப்பைச் சந்திக்கவேண்டி வந்துவிட்டது.

இது ஒருபுறமிருக்க, குறைந்த நாளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய சமராக யாழ்தேவி அமைந்துள்ளது. 7 நாட்கள் மட்டுமே நடந்த இந்தச் சமரில், இரு தரப்பிலும் ஏறக்குறைய 250 பேர்வரை பலியாகியிருந்தனர். அதாவது நாளொன்றுக்கு இருதரப்பையும் சேர்த்து - 34 பேர் களப்பலியாகிய சமராக அது இருந்தது. இது பலவேகய வீதாசாரத்தைவிட (32 பேர்) அதிகமானது. இதேவேளை,

அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள அனைத்துச் சமர்களிலும் 'மின்னல்' நடவடிக்கை வித்தியாசமான பரிமாணத்தை கொண்டமைந்துள்ளது. இது ஒரு முற்றுமுழுதான காட்டுச்சமர். அத்துடன் ஆ.க.வெ. சமர் முடிந்து இருபது நாளில் இது தொடங்கப் பட்டிருந்தது. அந்த நெருக்கடியான சூழலில் வளப்பற்றாக்குறைகளுடன் அந்தச் சமரை எதிர்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் புலிகளுக்கு இருந்தது. எனினும், திறமையாகப் போர்புரிந்து, உள்நுழைந்த படையினரை மணலாற்றுக் காட்டிற்குள் இருந்து புலிகள் வெளியேற்றி இருந்தனர்.

இதுவரை காலமும் நடந்த சமர்களுக்குள் ஜயசுக்குறுய் ஒரு விசேட கவனத்தைப் பெறுகின்றது. இது ஒரு பாரிய சமர். சமர் நடைபெறுகின்ற நாட்கணக்கிலும் - உயிரிழப்புகள், ஆயுத இழப்புகள் மற்றும் ஆயுத - படைக்கல பயன்பாடுகளிலும் ஜயசுக்குறுய் ஒரு உயர்ந்த இராணுவ பரிமாணத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. புலிகளின் சரமாரியான எறிகணை வீச்சுக்கள் இந்தச் சமரின் குறிப்பிடக்கூடிய ஒரு இராணுவ அம்சம். ஒரு மரபுப்படையைப் போல, புலிகள் எறிகணை வீச்சை நடாத்துகின்றனர் என்று தளபதிகள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். அதுவும் துல்லியமான இலக்குவைப்பு என்று புகழாரமும் சூட்டுகின்றனர். மற்றைய எந்தவொரு சமரையும் விட, காயமடையும் இராணுவத்தின் எண்ணிக்கை, ஜயசிக்குறுயில் பல மடங்காக உள்ளது. புலிகளின் துல்லியமான பெருந்தொகையிலான எறிகணை வீச்சே அதற்குப் பிரதான காரணம்.

ஐந்து மாதப் பூர்த்தியை எட்ட இருக்கும் ஜெயசுக்குறுய் மேலும் பல மாதங்கள் தொடரக்கூடிய ஏதுநிலைகள் தென்படு கின்றன.

'புலிகளை அழிக்க' அல்லது போராட்டத்தை நசுக்க என்று எத்தனையோ இராணுவ நடவடிக்கைகளை ஏதேதோ பெயரில் சிங்களப்படை நடாத்தி வருகின்றது. சில பெயர் சூட்டல்கள் வீராப்புத்தனம் கொண்டவை. சிலவற்றில் வெற்றி முழக்கம் தொனிக்கின்றது. ஆயினும், ஒரு இராணுவ நடவடிக்கை முடிய, பின்னர் வேறு ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கவேண்டிய நிலையிலேயே களநிலமை உள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கமுடியாது. மாறாக, ஆயுதப்போராட்டம் வீரியம் பெற்று வளர்ந்து செல்ல அவை உரமாகின்றன. இந்த உண்மையைச் சிங்கள அரசாங்கங்கள் என்று உணர்ந்து கொள்ளுமோ தெரியாது.! ✷

## தரிசனம் தாருங்கள்

கண்கள் திறவுங்கள் -உங்கள்
கண்கள் திறவுங்கள்

கரையினைத் தேடிடும் அலை
மனமாகுது
காற்றினில் போரிடும் படகென ஆடுது
உங்களின் திருமுகம் ஒரு முறை
பார்க்கனும்
உச்சிமோர்ந்துமே உடலினைத்
தழுவனும்

கண்கள் திறவுங்கள் -உங்கள்
கண்கள் திறவுங்கள்

நெஞ்சம் எல்லாம் உம் நினைவுகள்
நிறைக்குது
நிழல்கள் எல்லாம் உம்
நிஜமெனத்தோன்றுது
விண்ணில் இன்னுமேன் இருந்தெமைப்
பார்க்கிறீர்
விடுதலை வீரரே எம்மிடை வாருங்கள்

கண்கள் திறவுங்கள் -உங்கள்
கண்கள் திறவுங்கள்

பொன்னில் மணியென எம்மிடை நடந்தீர்
போரினில் புயலென புதுமைகள் புரிந்தீர்
மண்ணுக்குள் இன்னுமேன் மௌனமாய்த்
தூங்கிறீர்
மா...வீரரே ஒரு முறை
எம்மிடைதோன்றுங்கள்

கண்கள் திறவுங்கள் -உங்கள்
கண்கள் திறவுங்கள்

எமது தாயகம் காத்திடப் போயினீர்
ஈழத்தாயின் சேயென ஆயினீர்
பாசத்தோடே இப் பண்ணினைப்
பாடுறோம்
பாசறைத் தோழரே பலம் தர வாருங்கள்

மெய்யினை வருத்திய உம் திறண்
கேட்கிறோம்-தாய்
மண்ணினை நேசித்த தியாகத்தைப்
போற்றுறோம்
நெய்யில் உருகிடும் விளக்கினை ஏற்றியே
மேதினி மீதினில் உம் புகழ் பாடுறோம்

கண்கள் திறவுங்கள் -உங்கள்
கண்கள் திறவுங்கள்

மண்ணின் மைந்தர் நாம்
மலருடன் நிற்கின்றோம்
கையில் விளக்கினை
ஏந்தியே வேண்டுறோம்

கன்னத்தில் நீர் கோடிடும்
காட்சியைப் பாருங்கள்
கனவிது என்றிட -உம்
கண்களைத் திறவுங்கள்

என்னத்தைச் சொன்னாலும்
எம் மனம் ஆறாது
எமது வீரரே தரிசனம் தாருங்கள்

-தமிழொளி

# தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் செய்தி

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.
27. 11. 1997.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

## இன்று மாவீரர்நாள்.

எமது இனத்தின் விடுதலைக்காகத் தமது இன்னுயிரை ஈகம்செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர்த் தியாகிகளை நாம் நினைவுகூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.



மக்களின் விடுதலையென்ற ஒரு மகத்தான இலட்சியத்தை வரித்து, அந்த இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்தை அடைய உறுதிதளராது போராடி, அந்த இலட்சியப் போரில் தமது உயிரையே அர்ப்பணித்த மாவீரர்கள் மகோன்னதமான மனிதப்பிறவிகள்.

மாவீரர்களைப் புனிதர்களாகவே நான் கௌரவிக்கின்றேன். தாய் நாட்டின் விடுதலையென்ற பொதுமையான பற்றுணர்வால் ஈர்க்கப்படும் அவர்கள், தமது தனிமையான பற்றுக்களையும் பாச உறவுகளையும் துறந்துவிடுகிறார்கள். சுயவாழ்வின் சுகபோகங்களைக் கைவிட்டு பொதுவாழ்வின் அதியுயர் விழுமியத்தைத் தழுவிக்கொள்கிறார்கள். அந்தப் பொதுவான இலட்சியத்திற்காகத் தமது சொந்த வாழ்வையும் அர்ப்பணிக்கத் துணிகிறார்கள். இதனை ஒரு புனிதமான துறவறமாகவே நான் கருதுகிறேன். இந்தப் புனிதத் துறவறத்திற்கு இலக்கணமாக விளங்கும் மாவீரர்களை நாம் புனிதர்களாகவே பூசிக்க வேண்டும்.

தன்னலமற்ற, தமக்கெனப் பயனை எதிர்பாராத விடுதலைத் தொண்டில், தம்மையே அழித்துக்கொள்ளும் அதியுன்னத தியாகிகள் என்பதால், மாவீரர்களுக்கு எமது விடுதலை இயக்கம் பெரும் மதிப்பையும் கௌரவத்தையும் வழங்கி வருகின்றது. மாவீரர்களை எமது இனவிடுதலைப் போரின் வரலாற்று நாயகர்களாக, தேசிய வீரர்களாக நாம் போற்றுகின்றோம். அவர்களது நினைவுகள் காலத்தாற் கரைந்துபோகாது, என்றும் எமது நெஞ்சங்களில் நிலைத்திருக்க வேண்டுமென்பதற்காக நாம் அவர்களுக்கு நினைவு விழாக்கள் எடுக்கிறோம். நினைவுச் சின்னங்கள் நிறுவி கௌரவிக்கிறோம். வீர வணக்கச் சடங்குகளுடன் மாவீரர்களது வித்துடல்களை விதைப்பதும், நினைவுக் கல் நாட்டுவதும், அவர்களது கல்லறைகளைப் புனிதச் சின்னங்களாக பூசிப்பதும், அவர்களது துயிலும் இல்லங்களைப் புனிதத் தலங்களாக வழிபடுவதும், எமது மக்களால் விரும்பப்படும் வழக்காகிவிட்டது.

மாவீரர்களின் நினைவாக, ஒரு வீரவழிபாட்டு மரபு, எமது மண்ணில் உருவாகியிருக்கிறதென்பதை நான் பெருமிதத்துடன் சொல்வேன்.

மாவீரர்களை வணக்கத்துக்குரியவர்களாகக் கௌரவிக்கும் எமது வீரமரபு, தமிழரின் எதிரியான சிங்கள இனவாத அரசுக்கு எரிச்சலூட்டியிருக்கிறது. சிங்கள தேசம் யாரைப் பயங்கரவாதிகளாக இழிவுபடுத்தி வந்ததோ அவர்களைத் தமிழர் தேசம் புனிதர்களாகப் பூசிப்பதை பேரினவாதிகளாற் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அத்தோடு மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலை எழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத் துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது.

யாழ்ப்பாணக் குடாநாடு எதிரிப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன.

புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களாற் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச் சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனமென இச் செயலைச் சிறுமைப்படுத்திவிட முடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச் செயல். தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறையை ஏற்படுத்திய இந்த அவச்செயலுக்குச் சிங்களப் பேரினவாத அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இந்தப் பண்பற்ற செயல் ஓர் உண்மையைப் பகிர்கிறது. அதாவது, சிங்கள தேசத்தை ஆண்டுவரும் இனவாத ஆட்சியாளர்கள் தமிழர்களின் உணர்வுகளுக்கு என்றுமே மதிப்பளிக்கப்போவதில்லை. அத்துடன் தமிழர்களின் தேசிய அபிலாசைகளைப் புரிந்து, அவர்களுக்கு நீதியும் வழங்கப்போவதில்லை. இறந்து போனோரின் அமைதியையே கெடுப்பவர்கள், இறவாதோருக்கு நிம்மதியைக் கொடுப்பார்களென நான் கருதவில்லை.

## எனது அன்பார்ந்த மக்களே!

இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரம் சிங்களப் பெரும்பான்மை மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்த அரைநூற்றாண்டு காலமாக, மாறி, மாறி அதிகார பீடத்தில் ஏறிய சிங்கள இனவாதக் கட்சிகள் ஈழத் தமிழினத்தின் துயர் துடைக்க இதுவரை சாதித்தது என்ன?

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டதா?

தீப்பற்றி எரியும் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாணப்பட்டதா?

ஒன்றுமே நடக்கவில்லை.

மாறாக, இந்த நீண்ட காலவிரிப்பில் தமிழர்கள் மீது, துன்பத்தின் மேல் துன்பமாக தாங்கொணாத் துயரப் பளு மட்டுமே சுமத்தப்பட்டு வந்தது.

தமிழரின் நிலத்தை அபகரித்து, தமிழரின் மொழியைப் புறக்கணித்து, தமிழரின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளை மறுத்து, தமிழரின் தேசிய வளங்களை அழித்து, தமிழரின் சமூக, பொருளாதார வாழ்வைச் சீரழித்து, தமிழர்களைப் பெரும் எண்ணிக்கையில் கொன்றொழித்துத் தமிழினத்தை இனவாரியாக ஒழித்துக்கட்டுவதில்தான் சிங்கள அரசுகள் முனைப்புடன் செயற்பட்டன. இதுதான் வரலாற்று உண்மை.

சிங்களத்தின் ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக் காலம்தான் தமிழினத்திற்கு சாபக்கேடாக அமைந்தது. இந்த மூன்று ஆண்டு காலத்தில் அவலத்திற்கும் இம்சைக்கும் ஆளாகாத தமிழர்களே இல்லையெனலாம். சந்திரிகாவின் ஆட்சியில்தான் போர் விரிவடைந்து, பெரும் தீயாகப்பரவி தமிழர் தேசத்தைச் சுட்டெரித்தது. இதனாற் சன சமுத்திரமாக மக்கள் இடம்பெயர்ந்து இருப்பிடமின்றி அவலப்பட்டனர். தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க பாரம்பரிய நிலங்கள் இராணுவ அடக்குமுறையாட்சிக்கு உட்பட்டன. மாறி மாறி நிகழ்ந்த படையெடுப்புகளோடு உணவு, மருந்துத் தடைகளையும் அரசு இறுக்கி வந்ததால் பசியும் பட்டினியும், நோயும் சாவுமாக தமிழ் மக்கள் சந்தித்த இன்னல்களைச் சொல்லில் விபரிப்பது கடினம்.

ஐம்பது ஆண்டு காலமாக, முடிவின்றி நீண்டுசெல்லும் சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறையானது சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில்தான் மிகவும் தீவிரமான கடும்போக்கை எடுத்தது எனலாம். தமிழரின் தேசிய சுதந்திர இயக்கமாகிய விடுதலைப் புலிகளை நசுக்கி, தமிழினத்தைச் சிங்கள இராணுவ ஆட்சியின்கீழ் அடிமைப்படுத்துவதுதான் அரசின் அடிப்படையான நோக்கம். இந்த இராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்துவதில்தான் முழு முனைப்போடு செயற்பட்டு வருகிறது சந்திரிகா அரசு.

தனது பாரிய இராணுவத் திட்டத்தையும் அதன் விளைவாக தமிழருக்கு ஏற்பட்டு வரும் பேரவலங்களையும் மூடிமறைத்து, உலகத்தின் கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கில் சந்திரிகா அரசானது தீர்வுப்பொதி

என்ற நாடகத்தை அரங்கேற்றியது. இந்த அரசியல் நாடகத்தின் சூட்சுமத்தை உலக நாடுகள் புரிந்துகொள்ளவில்லை. சந்திரிகாவின் தீர்வுப் பொதியானது, இராணுவத் தீர்வுத் திட்டத்தின் மறுமுகம் என்பதை உலகம் கண்டுகொள்ளவில்லை. மாறாக, சிங்கள அரசின் சாணக்கியமான பிரச்சார மாயையில் மயங்கி உலக நாடுகள் சந்திரிகாவின் தீர்வுப்பொதிக்குக் கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கின. சிங்கள–பௌத்த பேரினவாதத்தின் தமிழ்த் துவேசப் போக்கினால் தமிழர் முகங்கொடுத்த கசப்பான வரலாற்று அனுபவத்தைக் கருத்திற்கொள்ளாது, அவசரப்பட்டு உலக நாடுகள் எடுத்த இம்முடிவு எமக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபுறம் ஏமாற்றத்தையும் கொடுத்தது. சர்வதேச உலகம் சந்திரிகாவின் சார்பாகத் திரும்பியதால் துன்பம் தோய்ந்த தமிழரின் அவலக்குரல் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தவில்லை.

சந்திரிகாவின் தீர்வுப்பொதி, தமிழரின் அடிப்படையான தேசிய அபிலாசைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை. காலத்திற்குக் காலம் தேய்ந்து, தேய்ந்து உள்ளடக்கம் உருக்குலைந்துவரும் இத் தீர்வுத்திட்டம் இரண்டரை வருடங்களாக இழுபட்டும் இன்னும் முழுமை பெறவில்லை. எனினும் இத் திட்டத்தின் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. தமிழரின் தேசியத் தனித்துவத்தையும், தாயகத்தையும் மறுதலித்து, தமிழர் தேசத்தைச் சிங்கள இறையாட்சியின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவருவதுதான் இதன் குறிக்கோள். இராணுவத் தீர்வின் நோக்கமும் இதுதான். எனவே, சந்திரிகாவின் அரசியற் பொதியும், இராணுவத் திட்டமும் ஒரே நாணயத்தின் இரு முகங்களாகவே எமக்குத் தெரிகின்றன.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை நீதியான முறையில், சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடமில்லை. தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஓர் உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவும் சந்திரிகாவிடம் துணிவில்லை. இந்த இயலாமையை நியாயப்படுத்தத் தீவிரப் பேரினவாத சக்திகள் மீது பழியைச் சுமத்த முனைகிறது அரசு. உண்மையில் சந்திரிகாவின் அரசும் சிங்கள–பௌத்த பேரினவாதத்தின் ஒரு நவீன வடிவம்தான். சிங்கள–பௌத்த பேரினவாதத்தைக் கட்டியெழுப்பி, அதனைப் பூதாகரமாக வளர்த்துவிட்ட சந்திரிகாவின் அரசியற் கட்சி, இப்பொழுது அந்தத் தீவிரவாத சக்திகள் மீது குறைகூறுவது அபத்தமானது.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பவில்லையெனச் சந்திரிகா அரசு கூறுவதிலும் உண்மையில்லை. நாம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பியதால்தான் திம்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பல பேச்சுக்களிற் கலந்து கொண்டோம். இப்பேச்சக்களின்போது நாம் தமிழினத்தின் நலனில் உறுதியாக நின்றோம். சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்தன. இதனாற் பேச்சுக்கள் வெற்றி பெறவில்லை. இதற்கு எம்மீது குறைகூறிப் பயனில்லை. சிங்கள அரசுகளின் விட்டுக் கொடாத போக்கே இந் நிலைமைக்கு காரணம்.

தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை அங்கீகரித்து, அவற்றின் அடிப்படையில் ஓர் அரசியற் தீர்வுத் திட்டம் வகுக்கப்படவேண்டுமென நாம் திம்புக் காலத்திலிருந்தே வலியுறுத்தி வருகின்றோம். இதுவே இன்றும் எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது.

எந்தவோர் அரசியற் தீர்வுத் திட்டத்திற்கும் தமிழரின் தாயகம் அடிப்படையானது. தமிழரின் நிலமானது தமிழரின் தேசிய வாழ்விற்கும் தேசிய தனித்துவத்திற்கும் ஆதாரமானது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயக நிலத்தை அங்கீகரிக்காத எந்தவொரு திட்டமும் தமிழரின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வாக அமையாது.

தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்றுக்கொள்ளத் தயங்கும் இன்றைய சிங்கள அரசியல்வாதிகள் திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தமிழர்களுக்கு வழங்குவார்களா என்பது கேள்விக்குரியது. தென்னிலங்கை அரசியலுலகத்திற் சிங்கள–பௌத்த பேரினவாதச் சிந்தனை ஆதிக்கம் செலுத்தும்வரை இது சாத்தியமாகப் போவதில்லை. இந்த உண்மையை உணர்ந்துகொண்டதால்தான், இருபது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழீழ மக்கள் தன்னாட்சி உரிமையைப் பிரகடனம் செய்து தனியரசு அமைக்க முடிவெடுத்தனர். தமிழ் மக்களின் இத் தேசிய அபிலாசையை இலட்சியமாக வரித்தே, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எமது விடுதலை இயக்கம் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டப் போராடி வருகிறது.

தமிழரின் உரிமையையும் பறித்து, தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வு வழங்கவும் மறுத்து, தமிழர்கள் பிரிந்துசென்று தனியரசு அமைப்பதையும் எதிர்த்து, எல்லா வழிகளிலும் சமாதானப் பாதைக்கு இடையூறாக நிற்பது சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாம் அல்ல.

கடந்த ஐம்பது ஆண்டு காலமாக, அடக்குமுறை என்ற ஒரே வழியில்தான் சிங்களம் சென்று கொண்டிருக்கின்றது. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையால்தான் இலங்கையில் அமைதிகுலைந்து போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த அணுகுமுறையைச் சிங்கள தேசம் மாற்றிக்கொள்ளாவிடின், முடிவில்லா யுத்தத்தையும் பேரழிவையுமே அது சந்திக்க வேண்டிவரும். இந்த அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து நிற்பது, சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாமல்ல.

இராணுவ அடக்குமுறைக் கொள்கையால் சிங்கள தேசம் தன்னைத்தானே அழித்துக்கொண்டிருக்கிறதே தவிர, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிட முடியாது. இந்த உண்மையைச் சிங்களப் பேரினவாதம் என்றோ ஒரு நாள் உணர்ந்தே தீரும். ஆயினும் இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த எதிர்பார்ப்புடன் நாம் எமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகையல்ல. அது, இரத்தம் சிந்தி, உயிர்விலை கொடுத்து, போராடிப் பெறவேண்டிய புனித உரிமை.

எனவே, நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடைய தொடர்ந்து போராடுவோம்.

இத்தனை காலமும் நாம் சிந்திய இரத்தமும், நாம் செய்த உயிர்த் தியாகங்களும் வீண்போகாதென்ற திடமான நம்பிக்கையுடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

எமது புனித மண்ணைத் தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப் படைகளை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்போமென்ற திடசங்கற்பத்துடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

உறுதியுடன் போராடும் தேசமே இறுதியில் வெற்றிபெறுமென்ற உண்மையை நெஞ்சில் நிறுத்தி, நாம் செயலுறுதியுடன் போராடுவோம்.

மனவலிமையின் நெருப்பாக எரிந்து எமது மண்ணின் விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்த மாவீரர்களை நினைவு கூர்ந்து, நாம் இலட்சிய உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே.பிரபாகரன்

தலைவர்

தமிழீழ விடுதலைப் புலிகள்.

## அனைத்துலகத்தினதும் கவனத்தை ஈர்ந்த தமிழீழ மாவீரர் நாள்

தமிழீழ மாவீரர் வாரம், தமிழீழத்தின் பல பாகங்களிலும் பெரும் உணர்வெழுச்சியுடன் 21–11–97 வெள்ளியன்று ஆரம்பமாகின. தமிழீழத் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தொடக்க நாள் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் மக்களும் போராளிகளும் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றனர். தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள், போராளிகளின் முகாம்கள், பயிற்சிப் பாசறைகள், அரச செயலகங்கள், காவல் பணிமனைகள், பொதுநிறுவனங்கள், பாடசாலைகள் என அனைத்திலும் காலை 8.00மணிக்கு தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து மலர்தூவி கொடிவணக்கம் செலுத்தப்பட்டது. மாவீரர்தம் நினைவுகளை நெஞ்சில் நிறுத்தியவாறு மக்களும் போராளிகளும் இந்நிகழ்வுகளில் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

மாவீரர் வாரத்தின் இறுதித் தினமான 27–11–97 வியாழனன்று மாவீரர் நாள் நிகழ்வுகள், தமிழ்த் தேசிய எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. தமிழீழ மக்கள் வீதிகள் தோறும் பதாகைகளையும், முக்கிய சந்திகளில் மாவீரர் தியாக வரலாற்று வளைவுகளையும் அமைத்து, மஞ்சள் சிகப்பு நிறத் தோரணங்களால் அலங்கரித்து தம் மாவீரர் நினைவைப் போற்றினர். வீட்டு முன்றங்கள் முதல் முக்கிய இடங்கள் வரை பார்க்கும் இடமெல்லாம் மாவீரர் திருவுருவங்கள் மக்களால் வைத்து பூசிக்கப்பட்டன. தேசச் சுடர்களின் நினைவாக, ஈகச் சுடரேற்றி மலர் தூவி அஞ்சலித்து புனித உணர்வோடு மாவீரர் இலட்சியத்தை வென்றெடுக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். வன்னியில் பிரமாண்டமான முறையில் நினைவாலயங்கள் அமைக்கப்பட்டு மாவீரர் திருவுருவங்களை வைத்து மக்களும் மாணவ, மாணவியரும் மலர் அஞ்சலி செலுத்தினர். மாவீரர் நினைவாக கலைநிகழ்ச்சிகள், ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகள் ஒரு வாரமாக தமிழீழமெங்கும் நடைபெற்று, மாவீரர் நாளன்று சிறப்பு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் பலர், தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரையை ஆவலுடன் எதிர்பார்த்து வன்னிக்கு அண்மையாகத் திரண்டு இருந்தனர். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரை மாலை 4.15 மணியளவில் ஆரம்பமாகியது. தலைவரின் மாவீரர் உரையை தமிழீழ மக்கள் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளில் சேவையாற்றிவரும் அனைத்துலக வானொலிகள் மூலம் உலகத்தமிழருடன் சிறிலங்காவிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களும் கேட்கக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. ✵

# சிறிலங்காவின் நீதிமன்ற விசாரணைகள் வெறும் கண்துடைப்பேயன்றி நீதியைக் கொடுக்காது

**கொ**ழும்பு நீதிமன்றத்தில் 17-11-97 திங்களன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கிரிஷாந்தி கொலை தொடர்பான விசாரணைகள், சாட்சிகள் சமூகம் அளிக்காமையால் ஒத்தி வைக்கப்பட்டது. யாழ் குடாநாட்டிலிருந்து சாட்சிகள் நீதிமன்றத்திற்கு வரமுடியாததனால் விசாரணை ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால், இவ்விசாணைக்குச் சாட்சிகள் யாழில் இருந்து கொழும்பு வருவார்கள் என்றோ அன்றி அவர்கள் சுதந்திரமான முறையில் அச்சுறுத்தல் அற்ற நிலையில் சாட்சி அளிப்பார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இவ்வழக்கில் சுமார் 50 பேர் வரையில் சாட்சிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொழும்புக்கு வருவதற்கான போக்குவரத்து வசதிகள் இலகுவானதாக இல்லை என்பது ஒருபுறம் இருக்க, இவ் ஐம்பது பேரினாலும் கொழும்பு வந்து விசாரணையில் பங்கு ஏற்கும் பொருளாதார வசதிகள் உண்டா என்பதும் சந்தேகத்துக்கு உரியதே. இதைத் தவிர, சாட்சிகள் கொழும்புக்குப் புறப்படுவதற்கு அனுமதி எடுப்பதில் இருந்து அவர்கள் நீதி மன்றம் வந்து திரும்பும் வரையும் இவ்வழக்குடன் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாக வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையில் நீதிமன்றத்துக்கு உரிய காலத்தில் வந்து சேரவோ அன்றி நீதிமன்றத்தில் சாட்சி அளித்துவிட்டு பாதுகாப்புடன் வீடு செல்லவோ அன்றி சென்றபின்பும் பாதுகாப்புடன் இருக்க முடியுமா என்பதும் கேள்விக்கு உரியதாகும். இந்த நிலையில் நீதிமன்ற விசாரணைகள் மனித உரிமை இயக்கத்தினர் தெரிவித்துள்ளமை போன்று, கண்துடைப்பு நடவடிக்கையாக இருக்க முடியுமோ ஒழிய, ஒருபோதும் நீதி வழங்கும் நடவடிக்கையாக இருக்க முடியாது. அதாவது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக படையினரும் தண்டிக்கப்படுகின்றனர் என்று அரசாங்கம் காட்டிக்கொள்ளவே இது உதவும். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இதுபோன்று நடந்து கொள்வதற்கு முன் உதாரணம் இதுதான் என்பதல்ல. மைலந்தனைப் படுகொலையில் இருந்து அம்பாறை மாவட்டம் 4ம் கொலனியில் இடம்பெற்ற படுகொலைகள் வரை பல உதாரணங்கள் உண்டு. தவிர்க்க முடியாது, அரசாங்கம் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளபோதும், அதை நிறைவு செய்யவோ அன்றிக் குற்றவாளிகள் தண்டனை பெறவோ நடவடிக்கைகளை மேற்கொண்டதாக இல்லை. ஒருபுறம் நீதிவிசாரணைச் சம்பவம் இடம்பெற்ற மாவட்டங்களில் இருந்து நீதி விசாரணையை இடம் மாற்றியோ அன்றி நீதி விசாரணைக்குப் பொலிசாரோ அன்றி அதிகாரிகளோ ஒத்துழைக்காமல் விசாரணைகளைத் தாமதம் செய்வது வழமையான ஒன்றாக உள்ளது. சில வழக்குகளில் நீதிபதிகளே இவை குறித்து தமது அதிருப்தியை வெளிக்காட்டியும் உள்ளனர். இவற்றைத் தவிர, அரசாங்கம் நீதி விசாரணைக்கு உத்தரவிடும் விடயங்களும் அவை நீதிமன்றம் வரை செல்பவையும் அரசாங்கத்தினால் மூடி மறைத்துவிட முடியாத அளவுக்குக் கைமீறிச் சென்றுவிட்ட விடயங்களே ஆகும். இல்லாவிட்டால் யாழ் குடாநாட்டில் மட்டும் 1996ம் ஆண்டிற்குப் பின்னர் குறைந்தது 700க்கு மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பாக இராணுவத்தினர் விசாரணைக்கு உட்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவில்லை. கைமீறிச் சென்றுவிட்ட சில விசாரணைகளை மட்டுமே விசாரணைக்கு என விட்டுள்ள அதேவேளை, அதற்கும் இயன்றளவு முட்டுக்கட்டைகளையும் தடைகளையும் போட்ட வண்ணமே உள்ளது. அரசாங்கம் விசாரணைக்கு உத்தரவிட்ட வழக்குகள் எதிலுமே ஆயுதப் படையினர் தண்டிக்கப்படவில்லை என்பதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். இந்த வகையில் அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளைக் கொண்டு பொலிசார் சிலர் மனித உரிமை விடயத்தில் சந்திரிகா அரசாங்கம் அக்கறையாக உள்ளது, நிலமைகள் முன்னேற்றம் கண்டுள்ளது எனக் கூறுவது தான் வேடிக்கையாக உள்ளது. இவர்களின் இந்த நடவடிக்கை யானது சந்திரிகா அரசாங்கத்தின் மனித உரிமை விடயங்களை மூடி மறைப்பதற்கும் ஒரு வகையில் ஒத்துழைப்பு வழங்குவதாகவே உள்ளது.

இது மனித உரிமைகள் தொடர்பாக தாம் தேர்ந்தெடுத்துள்ள வழி முறைகள் சரியானது என சந்திரிகா அரசு நியாயப்படுத்தவும் அதைத் தொடர ஊக்கம் அளிப்பதுமாகவே இருக்கும். ✳

நீதிமன்ற விசாரணைகள் மனித உரிமை இயக்கத்தினர் தெரிவித்துள்ளமை போன்று, கண்துடைப்பு நடவடிக்கையாக இருக்க முடியுமோ ஒழிய, ஒருபோதும் நீதி வழங்கும் நடவடிக்கையாக இருக்க முடியாது. அதாவது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக படையினரும் தண்டிக்கப்படுகின்றனர் என்று அரசாங்கம் காட்டிக்கொள்ளவே இது உதவும்.

1996ம் ஆண்டிற்குப் பின்னர் குறைந்தது 700க்கு மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பாக இராணுவத்தினர் விசாரணைக்கு உட்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவில்லை. கைமீறிச் சென்றுவிட்ட சில விசாரணைகளை மட்டுமே விசாரணைக்கு என விட்டுள்ள அதேவேளை, அதற்கும் இயன்றளவு முட்டுக்கட்டைகளையும் தடைகளையும் போட்டவண்ணமே உள்ளது.

# பாணும் அரசியலும்

"**ப**தவிக்கு வந்தால் பாணின் விலையை ரூபாய் 3.50 ஆகக் குறைப்போம் என்றோம். சொன்னபடி பதவிக்கு வந்ததும் குறைத்தோம். பின்னர் மாவின் விலை உலக சந்தையில் கூடியது. அதற்கேற்ப விலையைக் கூட்டினோம். நாம் தொடர்ந்தும் 17 ஆண்டுகள் பதவியில் இருந்தால் அவ்வளவு காலமும் பாணை ரூபாய் 3.50 க்கு வழங்க முடியுமா?" கொள்கைத் திட்டம் அமுலாக்கல் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் இக் கேள்வியானது, அவரைப் பற்றியும் அவரது நம்பகத்தன்மை குறித்தும் அவர் வகிக்கும் பதவி எத்தனை தூரம் அவருக்குப் பொருத்தப்பாடானது என்பது குறித்தும் பலமானதொரு கேள்வியை எழுப்புவது தவிர்க்க முடியாதது. ஏனெனில் அமைச்சர் மேலே கூறியுள்ள கருத்துக்கள் எத்தனை தூரம் சிறுபிள்ளைத்தனமானதும் கூட. சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் ரூபா 3.50க்கு பாண் வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கிய போது அது சாத்தியமாக முடியாத விடயம் என்றே பொருளியலில் ஆய்வாளர்களினாலும் அன்று ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சியினாலும் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே பெரிய அளவில் மா கொள்வனவிற்கு மானியம் வழங்கப்படும் நிலையில் பாணின் விலையை மேலும் அரைவாசியாகக் குறைத்தல் என்பது இயலாததொன்று என அவர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால், சந்திரிகா அரசாங்கமோ எப்பாடுபட்டாவது பாணின் விலையை 3.50 சதமாகக் குறைக்கப்படும் என்று வலியுறுத்தி வந்தது. இதனை நம்பியே பெரும்பான்மை சிங்கள மக்கள் தமது வாக்குறுதிகளைப் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு வழங்கினர். ஆனால், தற்பொழுது அமைச்சரின் பேச்சோ தமது வாக்குறுதிகளை தாமே மறுப்பது போன்றும் ஒரு வகையில் அவ் வாக்குறுதியானது, ஆட்சியைக் கைப் பற்ற கையாண்ட ஒரு தந்திரோபாயம் என்பதையும் நிரூபிப்பது போன்றே உள்ளது. தேர்தல்களின் போது வாக்குறுதிகள் வழங்கப்படுவதும் அவற்றை நம்பி மக்கள் வாக்களிப்பதும் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அரசியல்வாதிகள் அதனைக் கைவிடுவதும் 3ஆம் உலக நாடுகளில் புதுமையான தொன்றல்லத்தான். ஆனால், வழங்கிய வாக்குறுதிகளைச் சிறிய காலத்திற்கு நிறைவேற்றிவிட்டு வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுவிட்டதென மக்களை ஏமாற்ற முனைவதானது, மக்களை மடையர்களாகக் கருதி மீண்டும் அதன் மூலம் அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளேயாகும். ஏனெனில் பாணின் விலையை மூன்று மாதத் திற்கோ அன்றி 6 மாதத்திற்கோ மட்டும்தான் குறைப்பதென்றால், ஐ.தே.கட்சியின் இறுதிக் காலத்தில் பாணின் விலை 6.50 ஆக இருந்தமை குறித்து, குறை கூறியிருக்க முடியாது. ஏனெனில், ஐ.தே.க. ஆட்சி நடந்த 17 வருட காலத்தில் 10 வருடகாலத்திற்கு மேல் பாணின் விலை 3.50 சதத்திற்கு கீழேதான் இருந்துள்ளது. இந்த நிலையில் சில மாதகாலத்திற்கு பாணின் விலையைக் குறைத்துவிட்டு தமது வாக்குறுதி நிறைவு செய்யப்பட்டுவிட்டதென கூறிக் கொள்வது அப்பட்டமான நம்பிக்கைத் துரோகமாகும். இதைத்தவிர, சர்வதேசச் சந்தையில் மாவின் விலையானது ரூபாய் 3.50க்கு, பாணை வழங்குவதற்கு ஏற்ற வகையில் இருக்கப் போவதும் இல்லை என்பது ஏற்கனவே தெரிந்த விடயமாகும். ஏனெனில், அரசு வாக்குறுதி அளித்த போதே சர்வதேச ரீதியில் மாவின் விலை அதிகமாக இருந்தது.

இந்த நிலையில் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சுப் பொறுப்பாக உள்ள ஓர் அமைச்சர் சர்வதேச சந்தையில் மாவின் விலை உயர்ந்ததால் மாவின் விலையை அதிகரித்துள்ளோம் எனக் கூறுவது ஏமாற்றுவது மட்டுமல்ல, அவரின் திட்டமிடல் ஆற்றல் குறித்துக் கேள்வியையும் எழ வைக்கின்றது. அதாவது சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கி விட்டு சர்வதேச விலை அதிகரித்ததால் வாக்குறுதி கைவிடப்பட்டது எனக் கூறுவது அவரின் திட்டமிடல் ஆற்றல் பூஜ்ஜியம் என்பதையே காட்டுவதாக உள்ளது. இந்த வகையில் அமைச்சர் ஜெயராஜ் பேர்னாண்டோபுள்ளேயின் கூற்றானது சந்திரிகா அரசு மக்களுக்குச் செய்துள்ள நம்பிக்கைத் துரோகத்தையும் இதேசமயம் அமைச்சர் பேர்னாண்டோ புள்ளேயின் நம்பகத்தன்மை திட்டமிடல் ஆற்றல் குறித்து அவநம்பிக்கையையும் ஏற்படுத்துவதாக உள்ளது. ஆனால், இவ் அரசியல்வாதிகள் அதிலும் குறிப்பாக சுதந்திரக்கட்சி அரசியல்வாதிகள் பாண், அரிசி விலை அதிகரிப்பில் 17 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்ததை இவ்வளவு விரைவில் மறந்துவிடுவது எதிர்காலத்துக்கு உகந்ததல்ல. ✳

அரசு வாக்குறுதி அளித்த போதே சர்வதேச ரீதியில் மாவின் விலை அதிகமாக இருந்தது. இந்த நிலையில் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சுப் பொறுப்பாக உள்ள ஓர் அமைச்சர் சர்வதேச சந்தையில் மாவின் விலை உயர்ந்ததால் மாவின் விலையை அதிகரித்துள்ளோம் எனக் கூறுவது ஏமாற்றுவது மட்டுமல்ல, அவரின் திட்டமிடல் ஆற்றல் குறித்துக் கேள்வியையும் எழ வைக்கின்றது.

# சிறுகதை

# துலாமரத்தில்

அ.பாலமனோகரன்



''கனநேரம் நிந்திரை முழிக்காதை தங்கச்சி!...... நேரத்துக்குப் படு!...... நான் படுக்கிறன்!" என்று கூறியபடியே பாயில் படுத்த தன் தாயைத் திரும்பிப் பார்த்தாள் ராணி.

வீட்டின் ஒரு மூலையில் இதற்குள்ளாகவே உறங்கிட்டிருந்த தனது தங்கை, தம்பி இருவருக்கும் அருகிலே, "கொட்டுக் கிணத்தடியானே!" என வாய்விட்டு வேண்டிக் கொண்டே உடலைச் சரித்த தன் தாயைப் பார்க்கையில் ராணியின் இதயம் கனத்தது.

அதிகாலையில் எழுந்து தோட்ட வேலைகளைப் பார்த்து, பின் சந்தைக்குக் காய்கறிகளைக் கொண்டுசென்று விற்று, பின்னர் வீட்டிலும் தோட்டத்திலும் இருட்டும் வரையில் எத்தனை வேலைகளைத்தான் அம்மா செய்கின்றா!...... இறைப்புக்கு மட்டுந்தான் கூலிக்கு ஆள்பிடிப்பாள். மற்ற வேலைகள் எல்லாவற்றையும் செய்வது அவள் தானே!...... அப்பு இருக்கும் வரையில் அம்மாவுக்கு இத்தனை கஷ்டம் இருக்கவில்லை. இந்த நான்கு வருடங்களுள் எவ்வளவு நலிந்து போனா!......

ராணி பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஆழ்ந்து உறங்கிப் போனாள் அவளுடைய தாயார். அத்தனை உடற் களைப்பு!

ஒரேயொரு அறையையும், முன்னே சிறியதொரு திறந்த பகுதியையும் கொண்டிருந்த அந்தச் சிறிய வீட்டின் ஒரேயொரு சன்னலுக்கு முன்னால் போடப்பட்டிருந்த மேசையருகில் அமர்ந்து, விரைவில் நடக்கவிருக்கும் உயர்தரப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த ராணி மறுபடியும் தனது புத்தகத்தில் பார்வையைப் பதித்தாள்.

அவளுக்கு முன்னால் அடக்கமாக எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாந்தருக்கருகில் கிடந்த நீலநிறக் கடிதஉறை ராணியின் கவனத்தை ஈர்த்தது.

அவள் அதை எடுத்துப் படிக்கவில்லை. அதன் வசனங்கள் அவளுக்கு மனதில் பாடமாகி விட்டிருந்தன. சில மாதங்களுக்கு முன்னர், கனடாவிலிருந்து குமுளமுனைக்கு வந்த தனது மைத்துனனைத் திருமணஞ் செய்து கொண்டு, அவனுடன் கூடவே கனடாவுக்குப் போய்விட்ட அவளுடைய அன்புத் தோழி மாலதியின் கடிதம் அது.

ராணி! நான் இதை மிகவும் அவசரமாக எழுதுகிறேன். இங்கே எனது கணவருக்கு ஒரு நண்பர் உண்டு. பெயர் சிறீகாந்தன். ஊர் சண்டிலிப்பாய். இவர் இங்கு ஒரு நல்ல நிரந்தரமான வேலையில் இருக்கிறார். இங்கு நான் வந்த நாட்களிலிருந்து இவரை எனக்குத் தெரியும். எவ்விதமான தீயபழக்கங்களும் இல்லாத நல்ல இளைஞர். வயது 28. தனது சகோதரிகளைக் கரைசேர்க்க வேண்டுமென்பதால் இதுவரை அவர் திருமணம் செய்யவில்லை. இப்போது தனது கடமைகளை முடித்துவிட்டு குடும்ப வாழ்க்கையில் இறங்கவுள்ளார். சீதனம் எதுவும் வேண்டாமாம். நல்ல குணமுள்ள, படித்த ஒரு பெண்ணைத்தான் அவர் மணமுடிக்க விரும்புகின்றார். எமது திருமண வீடியோக்கொப்பியில் உன்னைக் காட்டினோம். அவருக்கு உன்னை மிகவும் பிடித்துள்ளது. உன்னை விட பத்து வயது அதிகம் தான். ஆனால் இந்தக் காலத்தில், அதுவும் இந்த நாட்டில் இப்படி ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைப்பது அரிது!

உனது குடும்பம் படும் கஷ்டம் எனக்கு தெரியும். நீ இவரைத் திருமணம் செய்து இங்கு வந்து விட்டால் உன் தாய்க்கும், தங்கை தம்பிக்கும் உன்னால் இயன்ற உதவியைச் செய்யலாம். நீயும் சந்தோசமான வாழ்வை அனுபவிக்கலாம்.

இத்துடன் சிறீயின் படத்தையும் அனுப்புகிறோம். உன் தாயுடன் கலந்து ஆலோசித்து விட்டு மறு தபாலில் எனக்குப் பதில் எழுது. இப்படியொரு அதிஸ்டம் யாருக்கும் கிடைக்காது. நீயும் இங்கு வந்து விட்டால் நானும் அதிஸ்டசாலிதான். உனது சாதகமான பதிலை நாம் உடனடியாக எதிர்பார்க்கின்றோம்.

ராணி கடித உறையைக் கையில் எடுத்து அதனுள் இருந்த படத்தை விளக்கொளியில் பார்த்தாள்.

குறை எதுவும் கூற முடியாத தோற்றம். செல்வச் செழிப்புத் தெரியும் முகம்.

......இவரை மணம் முடித்தால் பிக்குப் பிடுங்கல் அற்ற வசதியான ஒரு வாழ்க்கை கிடைக்கும்......

......ஆனால் என் தாயையும் தங்கை தம்பியையும் இங்கே விட்டுட்டுப் போய், நான் மட்டும் எப்படி நிம்மதியாக வாழ முடியும்? இவர்களுக்கு உதவ வேண்டுமானால் நான் அவரிடந்தானே கையேந்த வேண்டும்? அங்கு எனக்கு ஏதும் வேலை கிடைக்குமா? நான் வேலை செய்வது அவருக்குப் பிடிக்கா விட்டால்?......

ராணியின் மனமும், மானமும் இந்த வகையிலே வினாக்களைத் தொடுத்த போது அவள் சிந்திக்க வேண்டி விழிகளைச் சன்னலுக்கு வெளியே ஓட விட்டாள்.

வெளியே நிலவு காய்ந்து கொண்டு இருந்தது. இங்கிருந்து கிணற்றடி வரையில் வரிசையாக நின்ற மிளகாய், கொச்சி, கத்தரிச்செடிகளை மேலோட்டமாகக் கடந்த அவளுடைய பார்வை கிணற்றடி வரை சென்று, அங்கு கிணற்றுக்குப் பக்கத்தில் நிறுவப் பட்டிருந்த துலா மரத்தில் பதிந்து அதன் உச்சி வரை உயர்ந்தது.

கருமையாக, திடமாக, நிமிர்ந்து உயரமாக நின்ற அந்தத் துலா மரத்தை பார்த்ததுமே ராணிக்கு அவளுடைய அண்ணன் சுதனுடைய நினைவுதான் வந்தது. அவனும் இப்படித்தான் கடைசியாக வீட்டுக்கு வந்த போது உயரமாய், கருமையாய், வலிமையாய் வந்தான்.

இந்தத் துலா மரத்தை நிறுவ வேண்டும் என ஒற்றைக் காலில் நின்று தந்தையைத் தூண்டித் தானும் துணை நின்று தொழிற்பட்டதும் அவனேதான். அப்போது அவனுக்குப் பதினான்கு வயதுதான். அப்போது ராணி பன்னிரெண்டு வயதாக இருந்தாள். ஆறு வருடங்கள் கடந்த பின்னரும் அந்தச் சம்பவத்தை – துலா மரம் அமைப்பதற்குக் காரணமாக இருந்த அந்தச் சம்பவத்தை ராணியினால் எப்படி மறக்க முடியும்?

அவர்களது கிராமமாகிய குமுளமுனையில் உள்ள கடைகளில் மண்ணெண்ணை இல்லை. மறுநாள் காலை தோட்ட இறைப்புக்கு அவசியம் எண்ணை தேவைபட்டதால் அவனைத்தான் தந்தை சைக்கிளைக் கொடுத்து முல்லைத்தீவுக்கு அனுப்பியிருந்தார்.

அண்ணன் சுதன் இயல்பாகவே துடிப்பானவன். அதுவும் சைக்கிள் ஓட்டுவதென்றால் அதிக விருப்பம். அந்த மாலை வேளையில் உற்சாகமாய் புறப்பட்டவன் திரும்பிவர இரவாகி விட்டிருந்தது. கலன் நிறைய மண்ணெண்ணையுடன்தான் வந்தான். ஆனால் அவனுடைய கோலந்தான் வீட்டில் யாவரையுமே கலங்க வைத்தது. அவனுடைய கால்கள் இரண்டிலும் முழங்காலுக்குக் கீழே நாய்ப்பற்கள் பதிந்து இரத்தக் களறியாக இருந்தது. ஆத்திரமும் அழுகையுமாக அவன் கூறியவற்றைக் கேட்க ராணிக்கு நெஞ்சில் தணலைக் கொட்டியது போலிருந்தது.

எண்ணெய் வாங்கும் எரிபொருள் நிலையத்துக்குச் செல்வதானால் அதனருகில் இருந்த முல்லைத்தீவு இராணுவ முகாமைக் கடந்துதான் செல்லவேண்டும். அந்த முகாமின் பிரதான வாசலில் நின்ற காவற்சிப்பாய் அருகில், பத்துப் பன்னிரண்டு நாய்கள் ஒரு கூட்டமாகக் கிடந்தனவாம். சுதன் வாசலைக் கடக்கும் வரையில் முகாம் எல்லைவரை துரத்திய நாய்கள் மறுபடியும் அந்தச் சிங்களச் சிப்பாமிடம் போய்விட்டன.

சுதன் எண்ணெயை வாங்கிகொண்டு பதைபதைக்கும் இதயத்துடன் திரும்பியிருக்கிறான்.

அந்த நாய்களைக் கடந்துதான் வரவேண்டும். வேறுபாதையால் வருவதானால் தூரம் அதிகம். பொழுது சாய்ந்து விட்டிருந்தது. இப்போது பாரம் மிக்க எண்ணெய்க் கலன் வேறு. பல்லைக் கடித்துக்கொண்டு மனதுக்குள் கடவுளை வேண்டியபடி முதலிலேயே வேகத்தை அதிகரித்து அந்த இருநூறு யார் தூரத்தையும் குருவிபோல் கடப்பதற்கு முயன்றிருக்கிறான் சுதன்.

அவன் அருகில் வரும்வரையில் பதுங்கிக் கிடந்த அந்த நாய்கள், அவனுடைய சைக்கிள் அண்மித்ததுமே ஆவேசமாகக் குரைத்தபடி அவனைத் துரத்தியிருக்கின்றன. இந்தத் தடவை அவனது முயற்சி பலிக்கவில்லை. நாய்களின் பற்களினின்றும் தப்புவதற்காகக் கால்களை உயரத் தூக்கினால் சைக்கிளின் வேகம் குறைந்து விடும். அதற்கும் மேலாக அவை சைக்கிளின் மேல் முரட்டுத்தனமாகப் பாய்ந்து அவனையும் சைக்கிளையும் தரையில் வீழ்த்திவிட்டால் அதன்பின்னர் அவனுக்கென்ன நிகழுமோ தெரியாது. இவற்றையெல்லாம் உணர்ந்துகொண்ட சுதன் பலம் முழுவதையும் பயன்படுத்தி பெடல்களை மிதித்திருக்கின்றான். ஆனால், அவன் இராணுவமுகாம் எல்லையைத் தாண்டுவதற்குள் சைக்கிளின் இருபறமும் பாய்ந்து வந்து நாய்கள் அவனுடைய கால்கள் இரண்டையும் கடித்துக் குதறி விட்டிருந்தன. சில இடங்களில் சதை பிய்ந்து தொங்கியது.

வெடித்து விம்மியபடி அண்ணன் நடந்தவற்றைக் கூறியபோது ராணிக்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்தது.

"அந்த நாய்கள் கடித்தது கூட எனக்குப் பெரிய வேதனையைத் தரேல்லை அம்மா...... ஆனால் அந்தச் சிங்கள ஆமிக்காறன், நாயள் என்னைக் கடிக்கேக்கை ஏளனமாய் சிரிச்சதைத்தான் என்னாலை தாங்கேலாமல் கிடைக்குது!" எனக் கூறியபோது அவனுடைய கண்களுள் கொழுந்துவிட்டெரிந்த கோபக்கனல் ராணிக்கு இப்போதும் நெஞ்சுக்குள் தகித்தது.

தாய் அவனுடைய காயங்களைக் கழுவித் துடைத்து மிளகாய் எண்ணெய் தடவும்போதும் அண்ணன் அழாததுதான் ராணிக்கு அதிசயமாக இருந்தது. பல்லைக் கடித்தபடி எரிவைத் தாங்கிக்கொண்ட அவன் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகத் தனக்கு மருந்திட்டுக் கொண்டிருந்த தாயாரிடம் கூறியதை ராணியால் இப்போதும் மறக்க முடியவில்லை. "அந்த நாயள் சிங்கள ஆமிக்காறன் கொண்டுவந்த நாயளில்லையம்மா!...... அந்த நாயள் எல்லாம் எங்கடை ஊர் நாயளம்மா!...... அவங்கள் எறியிற எலும்புத் துண்டை நக்கிப் போட்டு எங்களுக்கே கடிக்குதுகள்!" என்றான்.

**கருமையாக, திடமாக, நிமிர்ந்து உயரமாக நின்ற அந்தத் துலா மரத்தை பார்த்ததுமே ராணிக்கு அவளுடைய அண்ணன் சுதனுடைய நினைவுதான் வந்தது. அவனும் இப்படித்தான் கடைசியாக வீட்டுக்கு வந்த போது உயரமாய், கருமையாய், வலிமையாய் வந்தான்.**

தொடர்ச்சி 12ம் பக்கம்......

# துலாமரங்கள்.... (சிறுகதை)

அந்தச் சம்பவத்தின் பின்னர் அண்ணன் அடியோடு மாறிவிட்டான். அவனுடைய சுபாவமான குறும்பும் கலகலவென்று பேசும் தன்மையும் எங்கோ ஓடி ஒளிந்துகொண்டன.

அந்த நாட்களில்தான் அவன் தோட்டத்தில் துலாமூலம் நீரிறைக்கும் வசதியை ஏற்படுத்தக் காரணமாவிருந்தான். இன்று எரிபொருள் தடையினால் மண்ணெண்ணை கிடைக்காத நிலையிலும் அவர்களுடைய தோட்டத்தில் ஒரு பகுதியையாவது பயன்படுத்தி அந்த வருமானத்தில் வயிற்றைக் கழுவமுடிந்ததும் அண்ணன்



நிறுவிய இந்தத் துலாவினால்தானே என நினைத்த ராணியின் கண்கள் ஈரமாய்ப் போயின.

அதற்குப் பின்னர் ஒருநாள் அண்ணனைக் காணவில்லை. அங்கும் இங்கும் ஓடித்திரிந்து விசாரித்ததில் அவன் இயக்கத்திற்குப் போய் விட்டான் எனத் தெரிந்தது.

ஆடுகளைச் சாய்த்து வருகையில் அவன் கொண்டுவரும் கட்டாக்காரைப்பழம், சூரை, கரம்பைப்பழம் என்பவற்றில் முதலில் ராணிக்குக் கொடுத்துத்தான் மற்றதை தங்கை, தம்பிக்குக் கொடுப்பான் சுதன். அத்தனை பாசமுள்ள அண்ணனின் பிரிவை அவளால் தாங்க முடியவில்லை. ஆனால் ராணியின் தாயோ மிக அதிகமாக அதிர்ந்து போனாள். தந்தை மனமுடைந்து போனார். வெகுநாட்களின் பின்னர் சுதனிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதை இப்போதும் ராணி பத்திரமாகத்தான் வைத்திருக்கின்றாள்.

"நான் சுகமாக இருக்கின்றேன். நீங்களும் என்ரை தங்கச்சிமார், தம்பி எங்கடை ஊரிலை நிம்மதியாய் வாழவேண்டும் எண்டதுக்காகத்தான் நான் இஞ்சை வந்தனான். ஆனபடியால் என்னைப்பற்றிக் கவலைப்படாமல் அதுகளை நல்லாய்ப் படிக்க வையுங்கோ."

அதன் பின் மூன்று வருடங்களுக்குப் பின்னர்தான் அவன் வீட்டுக்கு வந்தான். இந்தியன் ஆமியின் அட்டூழியம் மிகுந்திருந்த நாட்களில் ஒரு இரவு வந்தான். அவனை அண்ணன்தான் என உடனே அடையாளம் கண்டுகொள்ள ராணியினால் முடியவில்லை.

தந்தையும் தாயும் அவனைக் கட்டிக்கொண்டு கண்ணீர் பெருக்கினர். அவனைப் பார்க்கையில் ராணிக்கு ஒருபுறம் பயமாகவும் மறுபுறம் பெருமையாகவும் இருந்தது. அவன் மிகவும் உயரமாய், புலிகளின் இராணுவ உடையில், கையில் இயந்திரத் துப்பாக்கி, இடுப்பிலும் நெஞ்சிலும் தொங்கும் கைக்குண்டுகள், கழுத்தில் குப்பி சகிதமாய் இருந்தான்.

கண்களில் நீர் வழியவழிய தாய் அவனுக்கு உணவு ஊட்டி விட்டபோதுகூட அவன் தன் ஆயுதங்களைத் தரையில் வைக்கவில்லை. "இண்டைக்கு ஒரு இரவாவது எங்களோடை படுத்திட்டுப் போ ராசா!" என தாய் இரங்கிக் கேட்டபோது அவன் சிரித்துக்கொண்டே, "நான் இப்பவே போகவேணும் அம்மா!" என்றான். "எங்களிலை உனக்குக் கொஞ்சமெண்டாலும் பாசம் இல்லையே? நாங்கள்தானே உன்னைப் பெத்துவளர்த்த தாய்தேப்பன்!' என அடக்கமுடியாமல் அவள் குமுறியபோது, அவன் கூறியதை ராணி இப்போது நினைத்தாள்.

"அம்மா உங்களிலை எனக்குப் பாசம் இல்லையெண்டு நினைக்காதையுங்கோ! ஒரு நாளைக்கு எண்டாலும் உங்கள் எல்லாரோடையும் இருக்க எனக்கு விருப்பந்தான்! ஆனால் நான் இப்ப உங்கடை பிள்ளையில்லை! நான் இந்த மண்ணின்ரை பிள்ளை! இந்த ஆயுதங்களுக்கும் என்னுடைய பயிற்சிக்கும் எவ்வளவு காசு சிலவழிஞ்சிருக்கும் தெரியுமே! எந்த நிமிசமும் எதிரி இஞ்சை வரக்கூடும்! என்ரை விருப்பத்தைப் பாத்து, நான் அவதானக் குறைவாக இருந்து அதாலை ஏதும் நடந்தால் எங்கடை மண்ணுக்கு எவ்வளவு நட்டம் தெரியுமோ? இப்ப எங்களுக்குத் தாயும் தகப்பனும் எங்கடை தலைவர்தான்!" என்று சொன்னவன், போகுமுன்னர் கடைசியாகப் பேசியது ராணியுடன்தான்.

அவளுடைய தோள்கள் இரண்டையும் இறுக்கமாகப் பற்றிக்கொண்டு அவன் சொன்னான். "தங்கச்சி! நீ இப்ப வளந்திட்டாய்! உனக்கு எல்லாம் விளங்கும்...... அப்பு அம்மாவுக்கு நீதான் புத்திசொல்லி கவலைப்படாமல் இருக்கச் சொல்லவேணும்! எல்லாரும் வீட்டுக்கை இருந்தால் எதிரியை அழக்கிறது என்னெண்டு?...... நீ கவனமாய்ப் படிக்கவேணும்...... படிப்பும் ஒரு போராட்டந்தான்! உனக்குக் கீழே உள்ளதுகளுக்கு நீ முன்மாதிரியாய் இருக்கவேணும்! கட்டாயம் எங்கடை மண்ணுக்கு விடுதலை கிடைக்கும்! அப்ப நாங்கள் எல்லாரும் சேர்ந்து சந்தோசமாய் இருக்கலாம் என்ன!" என அவன் கூறியபோது அவனுடைய கண்கள் சற்றுக் கலங்கி விட்டிருந்ததையும் ராணி அவதானித்திருந்தாள்.

ஆனால் அடுத்த வாரமே, அப்படிச் சொல்லிச் சென்றவனுடைய சாம்பலை அவர்கள் வீட்டுக்குக் கொண்டு வந்துபோது பேரிடி விழுந்தது போல இருந்தது. உடலைக்கூடக் காண முடியவில்லையே எனத் தாய்க்கு ஏற்பட்ட ஆவேசத்தில் அவள் அந்தச் சாம்பலையே நீரில் கரைத்துக் குடிக்க முற்பட்டதை நினைக்க இப்போதும் ராணிக்கு நெஞ்சுக்குள் தகித்தது. ஆனால் அந்தத் துயரில் ஆழ்ந்து கண்ணீர் பெருக்கிக் கவலையைக் கரைக்கக்கூட விடவில்லை இந்திய அமைதிப்படையினர்!

மக்கள் யாவரையும் அந்தப் பிரதேசத்தை விட்டே வெளியேறும்படி உத்தரவிட்டனர். ஏதோ கையில் கொண்டு செல்லக் கூடியதை மட்டும் எடுத்துக்கொண்டு ஓட வேண்டிய நிர்ப்பந்தம். வயல் வெளிகளைக் கடந்து, காடுகளூடாக நடந்து, தொலைதூரக் கிராமங்களில் அகதிகளாக வாழ்ந்த அந்தக் காலத்தை நினைக்கையில் ராணியின் நெஞ்சு கொதித்தது. அப்போது தாக்கிய மூளைக் காய்ச்சலுக்கு மருந்து எதுவும் பெறமுடியாத நிலையில்தான் அவர்களு டைய தந்தை இறந்தார்.

வீட்டுக்குவீடு, கிராமத்துக்குக் கிராமம் எத்தனை உயிர்ப்பலிகள்! படுகொலைகள், பாலியல் வன்முறைகள்! அமைதிகாக்க வந்தவர்களே யமன்களாக மாறிய அராஜகம்!

அந்தக் காலமும் கழியத்தான் செய்தது.

தாயும் பிள்ளைகளும் தமது ஊருக்குத் திரும்பி வந்தபோது அவர்களுடைய வீடும் தோட்டமும் பாழடைந்து கிடந்தன. காட்டு யானைகள் தென்னம்பிள்ளைகளை அழித்து வீட்டையும் சரித்து நாசம் செய்திருந்தன. அவர்களுடைய வளவில் உருக்குலையாது, அழியாது, நிமிர்ந்து உயர்ந்து வலிமையாக நின்றது அண்ணன் அமைத்த துலாமரம் ஒன்றேதான்!

இன்றும் அதுதான் அவர்களுக்குக் கஞ்சி ஊற்றுகின்றது. பாடசாலைக்குக் கல்வி கற்க அனுப்புகின்றது. குடும்பத்தின் மானம் சிதையாமல் காப்பாற்றுகின்றது. இன்று அந்தப் பிரதேசத்தில் இராணுவ ஆட்சியுமில்லை. அண்ணனைக் கடித்த நாய்களுமில்லை!

எழுந்து வெளியே சென்று அந்தத் துலாமரத்தை ஒருதடவை தொட்டுத் தரிசிக்கவேண்டும் போல் ஒரு தவிப்பு ராணிக்கு ஏற்பட்டது.

அவள் எழுந்து, பனிபெய்யும் அந்த நிலவெறிக்கும் நடுஇரவில், மதாளித்துக் காய்த்துநின்ற மிளகாய், கத்தரி மற்றும் பயிர்களினூடாக நடந்து, வாழைகள் குலைதள்ளி நின்ற கிணற்றடியை அடைந்தாள். ராணியின் பார்வை தங்களுடைய அயராத உழைப்பிலே செழித்து நிற்கும் தங்கள் தோட்டத்தைச் சுற்றி வந்தது. அவளும் அவளுடைய தம்பி தங்கையும் துலா மிதித்து பாய்ந்த நீரில் உருவான ஆரோக்கியமான பயிர்க்கொடிகளைப் பார்க்கையில் அவளுக்குப் பெருமையாக இருந்தது.

ராணி துலாமரத்தை நெருங்கிச் சென்று அதன்மேல் சாய்ந்துகொண்டாள். அதன் நிறமும், வைரத்தன்மையும் ராணிக்கு மறுபடியும் அண்ணன் நினைவைக் கொண்டு வந்தன.

அவள் நிமிர்ந்து அந்த நெடிய துலாமரத்தின் உச்சியை நோக்கினாள். துலாமரம் சுட்டிக்காட்டிய வானவெளியில் பல நூறு நட்சத்திரங்கள் ராணியைப் பார்த்துக் கண் சிமிட்டின.

இவற்றில் ஒன்றுதான் என் அண்ணனோ? அவனைப் போல் இன்று எத்தனை எத்தனை அண்ணன்மாரும், அக்காமாரும் இந்த வானில் இருந்து எம்மைப் பார்க்கின்றனரோ!

ராணிக்கு அண்ணன் இறுதியாகச் சொல்லிச் சென்ற வார்த்தைகளும், அந்த வார்த்தைகள் வகுத்துக் காட்டிய கடமைகளும் இப்போது மிகவும் தெளிவாகப் புரிந்தன.

தனது நண்பி மாலதிக்கு என்ன பதிலை எழுதவேண்டும் என்பதில் இப்போ ராணிக்குச் சிறிதேனும் தயக்கம் இருக்கவில்லை. மனதில் நிறைவான அமைதியுடன் அவள் வீட்டை நோக்கி நடந்தாள்.

அந்தப் பனிபெய்யும், நிலவுகாயும் நள்ளிரவிலே தூரத்திலே உறுமிக்கொண்டு செல்லும் ஒரு பிக்கப் வாகனத்தின் ஒலி மிகவும் தெளிவாகக் கேட்டது.

......அண்ணன் சாகவில்லை!......

அவன் இப்போதும் எம்முடன்தான் இருக்கின்றான் என ராணியின் இதயம் உவகையுடனும் பெருமையுடனும் சொல்லிக் கொண்டது. ✵

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **2-1-1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**



உண்மைச் சம்பவங்களைக் கருவாகக்கொண்டு இந்திய, சிறிலங்கா இராணுவக் கொடூரத்தினை சித்தரிப்பதாக 'உண்மைக் கதைகளை' உள்ளடக்கிய **'அம்மாளைக் கும்பிடுகிறானுகள்'** எனும் நூலிலிருந்து தெரிவுசெய்யபட்டவை.




## ஓர் உண்மைக்கதை

தெருவின் இருமருங்கிலுமிருந்த அடர்காட்டின் பலமான மரக்கொப்புக்களைக் காற்று கிழித்துச் செல்லும் போது ஏற்படும் பேரோசையைத் தவிர, வேறு எந்தச் சத்தமும் இல்லை. அநேகமாக அந்தத் தெரு செத்துக் கிடந்தது.

வீதிக்கும் பற்றைக்கும் மாறி மாறி விரைந்து, மிதிவெடி வைக்கும் வேலையை துரித கதியில் முடித்து விட்டு, அடர்ந்த பற்றையைப் பிரித்துக் கொண்டு வந்த ரமேஸ் தெருவில் காத்திருந்த ஈசனை அண்மிக்கின்றான். முகத்தில் பூத்த வியர்வை கன்னத்தில் வெள்ளமாய் வழிகின்றது.

மிதிவெடிகள் – ஆக்கிரமிப்பாளர்களின் அடிமனதைக் கலக்கிவிடும் விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் ஓர் ஆயுதம்.

"ஏதும் சிலமன் தெரியுதோ மச்சான்? போவமே?"

"ஒண்டையும் காணேல்ல...... போவம்!"

நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான் ரமேஸ். நிலவு இன்னும் மறையவில்லை. போகமாட்டேனென அடம்பிடித்து, முகிற்கூட்டம் ஒன்றின் கையைக் கெட்டியாகப் பற்றியிருந்தது: பள்ளிக்குச் செல்ல மறுக்கும் ஒரு சிறுமி போல்.

சற்றுத் தள்ளியிருந்த குளம் ஒன்றிலிருந்து, ஐம்பதுக்கு மேற்பட்ட நீர்க் கொக்குகள் இதுவரையில் நிலவிய அமைதியைக் குலைத்துக் கொண்டு பறந்தன. அவற்றின் இறக்கைகள் அடிக்கும் சத்தம் "பட பட" என்று சீராக வானிற் கேட்டது. அதைத் தொடர்ந்து எழுந்த பறவைகளின் கதம்பமான ஒலியும் விடியலுக்குக் கட்டியம் கூறின.

வட்டக்கச்சிக் கிராமம் மெதுவாக விடியத் தொடங்கியது. சைக்கிளின் முன்பக்கத்தில் தொற்றிக் கொண்டே ரமேசை உற்றுப் பார்க்கிறான் ஈசன்.

வயது 17தான் என நம்ப மறுக்கும் உடல்வாகு. கடின வேலைகளால் காய்த்துப் போன கரங்கள். சீராக வாரப்படாத தலை. முகத்தில் தன்னம்பிக்கை. விடுதலைப் புலிகளுக்கேயுரிய, எதனையும் தீர்க்கமாக அலசும் கூர்மையான பார்வை. சேட் கொலரினூடு மறைந்தும் மறையாமலும் தெரியும் சயனைட் குப்பி.

"எப்படி இருக்கும் அந்த இந்தியக் கூலிகளுக்கு? தங்கட முகாமுக்குப் பக்கத்திலேயே இப்ப மிதிவெடி வெடிக்குமென்று எதிர்பாராமல், வெளிக்கிட்ட உடனேயே வெடிச்சுச் சிதறப் போகினம். எங்கட மக்களைக் கொல்லுறவையின்ர உடம்புகூட மிஞ்சக்கூடாது. இதில எங்கடை உயிர் போனாலும் பரவாயில்லை."

கழுத்தில் இருந்த சயனைட்டை ஒரு தடவை தொட்டு ஊர்ஜிதம் செய்கின்றன ரமேசின் கரங்கள்.

சயனைட் விடுதலைப் புலிகளின் உன்னதமான ஆயுதம். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உயிர் கொடுத்து, உத்வேகம் ஊட்டிக் கொண்டிருக்கும் வீர மறவர்களின் ஆன்மா அது!

"ம...... ம...... ஆ" பசுவொன்றின் கதறல் ரமேசின் எண்ண ஓட்டங்களுக்குக் கடிவாளமிடுகின்றது. பட்டியில் அடைக்கப் பட்டிருந்த மாடுகள் இவர்களைக் கண்டதும் உற்சாகமாகக் குரல் கொடுக்கின்றன.

"என்ரை பிறந்த இடம்...... நான்...... வளர்ந்த இடம்"

மாடுகள் அவனை அடையாளம் கண்டு துள்ளிக் குதித்தன. பசுவொன்றின் கால்களுக்கிடையில் சின்னஞ்சிறியதோர் கன்று. அதை வாஞ்சையுடன் தடவிக்கொடுக்கும் தாய்ப்பசு.

பழைய ஞாபகங்கள்...... கூடவே அம்மாவின் ஞாபகம். மெலிந்து கூடாகிவிட்ட உடல் – இடுங்கிய கண்கள் – பெயர் சொல்லிக் கூப்பிடாமல் 'ராசா' என்று எப்பவும்போல இப்பவும் அம்மா கூப்பிடுவது போன்றதொரு பிரமை.

"ஈசன்! கனகாலமாக நான் வீட்டுப் பக்கம் போகேல்ல. ஒரு ஐஞ்சு நிமிசம் கதைச்சுப் போட்டு வாறன். இதில்...... கவனமாகப் பார்த்துக் கொண்டு நில்லுங்கோ, அவங்கள் வந்திடுவாங்கள். கூப்பிடு தொலைவில் இந்தியன்ர காம்ப்."

ஈசன் அயலவன், இயக்கத்தின் ஆதரவாளனாக இருப்பவன். நம்பிக்கையுடன் அவனைக் காவலுக்கு நிறுத்திவிட்டு. கண்டாயத்தைத் திறந்து உள்ளே போகிறான் ரமேஸ்.

"என்ர ராசா" பாய்ந்து வந்து அணைத்துக் கொள்கின்றாள்:

"அம்மா!"

"இப்பவெண்டாலும் ஞாபகம் வந்ததோ? ஒவ்வொரு நாளும் நெஞ்சில தண்ணியில்லாமல்...... நான்......"

வாயில் சேலைத் தலைப்பை வைத்து விம்மியவள் "உள்ளுக்கு வா ராசா!...... ஆரேனும் கண்டினமெண்டாலும்...... தனியவே வந்தனி? ஏமலிப்புடன் வினவுகின்றாள்.

"இல்லையம்மா: ஈசன் வந்தவன். கொஞ்சம் தள்ளி நிக்கிறான். அது சரி தங்கச்சி எங்கே?"

ஆவலோடு விசாரிக்கின்றான் ரமேஸ்.

மற்ற எல்லோரையும் விட ஒரு போராளிதான் பாசம், மனிதாபிமானம், நீதி என்பவற்றைப் பெரிதும் மதிக்கிறான். அதனால்த்தான் எமது மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகக் கிளிர்ந்தெழுந்து, உயிரையே பணயம் வைத்துப் போராடி, அம் மக்களின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுகின்றான்.

தாய்ப் பசுவை ஒருநாள் பிரிந்திருக்கக் கூட கன்று மறுக்கும்.

ஆனால், ஒவ்வொரு விடுதலைப் புலியும் மக்களின் விடுதலைக்காக தாய், தந்தை, சகோதரங்களைப் பிரிந்து எத்தனை எத்தனை காலம்......

"நீ, வெளியில ஈசன் காவலுக்கு நிக்கிறதெண்டாய். ஆனால், அவன் பெடியனைக் காணேல்ல தம்பி."

மூக்குப் பேணியுடன் தேனீர் கொடுக்கச் சென்ற அம்மா திரும்பி வந்தாள்.

"காணேல்லையோ?"

சற்று யோசித்தவன்...... "அங்கால மறைவில் நிப்பானம்மா."

அதே நேரத்தில் அருகிலிருந்த இந்திய இராணுவ முகாமில்......

"கிழக்கால இருக்கிற ஒழுங்கேல அந்த ஓலை வீடுதான் சேர்...... அங்கே அவன் தனியாத்தான்......

ஈசன் சொல்லிக் கொண்டிருக்க, ஆக்கிரமிப்பாளர்கள் துரித கதியில் செயற்படுகின்றனர்.

"சாப்பிட்டுப் போவன் ராசா...... எத்தனை நாள் நீ என்ர கையால சாப்பிட்டு...... கண்களில் நீர் ததும்பக் கேட்கிறாள் அம்மா."

"இல்லையம்மா, நான் வேற இடம் போக வேணும். பிறகு ஒரு நாளைக்கு வாறன்."

துள்ளியெழும்பிய ரமேஸ் திகைத்துப் போகிறான். கனமான சப்பாத்துக்களின் கீழ் சருகுகள் நொருங்கும் சப்தம். அந்த ஒலி வீட்டு வாசலை நோக்கி விரைந்து வருகிறது. திரும்பி, செத்தைக்கூடாகப் பார்க்கிறான். கண்ணுக்கெட்டிய இடமெல்லாம் தலைக் கவசங்கள். அவனையே குறி வைக்கும் துப்பாக்கிகள்.

"அவன் பொடியனைக் காணேல்ல தம்பி?" அம்மா சொன்னதன் அர்த்தம் இப்போது விளங்குகின்றது.

"எம்மினத்துக்குள்ளேயே இருந்து" எம்மினத்தவரையே. கொல்லத்துணை போகும் துரோகிகள்...... அவர்களில் ஒரு உளவாளி இவன்.

தப்ப இடமில்லை...... நேரமுமில்லை.

போராடுகிற எவருக்கும் கிடைக்காத பேறு எனக்குத்தான் கிடைக்கப்போகுது...... தீர்மானிக்கின்றான்.

"அம்மா உங்கட மடியில படுக்கப்போறன்"

பிரமை அடைந்த நிலையில் ரமேசின் தாய்...... மடியில் மகன். கண்ணாடி நொருங்கும் சத்தம் கேட்கவும், இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது.

உடைந்த சயனைட் குப்பியின் ஒரு சிறுபகுதி கயிற்றுடன் கழுத்தில் தொங்க...... வாயெல்லாம் நீலம் பொரித்து மீளாத்துயிலில்......

போர்க்களத்திற்கு மகனை உச்சி முகர்ந்து அனுப்பி வைத்த புறநானூற்றின் வரலாறு அன்று......

வீர மகனின் உடலைத் தனது மடியில் தாங்கிக் கொண்ட வீரத்தாயின் சோக வரலாறு இன்று!

"ஐயோ......! ஓ......! என்ரை ரா...... சா......"

மார்பிலடைத்துக் குளறும் அந்த அபலைத் தாயின் ஓலம்...... அந்த ஆக்கிரமிப்பாளர்களைத் தாண்டி மெல்ல...... மெல்ல அந்த ஊரை நிறைக்கலாயிற்று.

–உணர்வு

**உடைந்த சைனைட் குப்பியினொரு சிறு பகுதி கயிற்றுடன் கழுத்தில் தொங்க...... வாயெல்லாம்...... நீலம் பாரித்து மீளாத் துயிலில்......**
**"ஐயோ.....! ஓ......! என்ரை ரா......சா......"**
**மார்பிலடித்துக் குளறும் அந்த அபலைத் தாயின் ஓலம்...... அந்த ஆக்கிரமிப்பாளரைத் தாண்டி மெல்ல...... மெல்ல...... அந்த ஊரை நிறைக்கலாயிற்று.**

## ஐந்தாவது அரசியல்....

ஆனால் சிறிலங்காவில் 69 வீதமானோர் மட்டும் பின்பற்றும் புத்தமதம் அரசமத அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இது, சட்டத்தின் கண்ணோட்டத்தில் பௌத்த சிங்களவர்களுக்கு மற்ற மதத்தவர்களுக்கு இல்லாத அந்தஸ்து வழங்கப்பட்டு அவர்கள் முதலாம் தரக் குடிமக்களாகத் தரம் உயர்த்தப்பட்டதைக் குறிக்கிறது. புத்த மதத்திற்கு 1972, 1978 யாப்புகளில் இல்லாத புதிய அந்தஸ்து இப்போதைய யாப்பில் வழங்கப்பட்டுள்ளது.

'புத்தமதம்' என்ற தலைப்பின் கீழ் புதிதாகச் சேர்க்கப்பட்ட விதி – 7 (2) (3) பின்வருமாறு கூறுகிறது.

7 (2) The state shall consult the supreme council in all matters pertaining to the protection of the Buddha Sasana.

7 (3) For the purpose of this Article "Supreme council" means a Council established by law in consultation with the Maha Sangha.

7 (2) புத்த சாசனத்தை பாதுகாப்பது தொடர்பான எல்லாக் காரியங்களிலும் அரசு உயர் சபையைக் கலந்து ஆலோசிக்கும்.

7 (3) இந்த விதிக்கு "உயர்சபை" என்பது, மகா சங்கத்தோடு கலந்து ஆலோசித்துவிட்டு சட்டரீதியாக உருவாக்கப்படும் சபையைக் குறிக்கும்.

இந்த ஏற்பாட்டை வேறுவிதமாகச் சொன்னால் புத்த மதத்தைப் பேணிக் காப்பது மட்டுமல்ல, புத்தசாசனத்தையும் பேணிக் காப்பதும் அரசுக்குரிய கடமையாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது தாயகபூமியில் மேலும் புதிது புதிதாக புனித பூமிகள் உருவாக இந்தப் புதிய யாப்பு வழி வகுக்கின்றது.

காணி பற்றிய உரிமை பிரதேசசபைக்குப் பாரப்படுத்தப்படலாம். மத்திய அரசுக்குத் தேவையெனக் கருதப்படும் காணியை மத்திய அரசு எடுத்துக் கொள்ளலாம்.

இதே போல் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பூமியும் மத்திய அரசுக்குச் சொந்தமானது.

இதனால் புனிதபூமிக்குக் காணி தேவைப்பட்டாலும் சரி, சிங்களக் குடியேற்றத்திற்கு காணி தேவைப்பட்டாலும் சரி சிங்களவர்களை எப்போதும் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள மத்திய அரசு அக்காணிகளை சுவீகரித்துக் கொள்ளலாம். மொத்தத்தில், "சுத்தியும் சுத்தியும் சுரப்பது கோடிக்குள்தான்" சிங்கள – பௌத்த ஆட்சியாளர்கள் வலம் வருகிறார்கள்.

ஐந்தாவது அரசியல் யாப்புக்கு நாலாவது அரசியல் யாப்பு அடித்தளம் இடுகிறது.*




## பணிதொடரும்

தமிழீழம் காக்கவென
கரிகாலன் ஆணையிலே
வீரம்மிகு துணிவோடு-பகை
விரட்டச் சென்றவன்
மார்பிலே குண்டு தைத்து
தாய் மண்ணிலே வித்தானான்-
மாவீரனின் உடல் சுமந்து-அவன்
பணிதொடரும் புலிவீரன்!

-த. ஜெயசேகர் (யாழ்ப்பாணம்),
யேர்மனி.

## தியாகதீபங்கள்

மாவீரர்கள்!
மனதைத் தொட்டுவிட்ட
மா மனிதர்கள்.
மெழுகுவர்த்தியாய் உருகி,
ஒளி வீசி,
நமக்கு வாழ்வு தரும்
தியாக தீபங்கள்!

-காரை ந. சேகர்,
இத்தாலி.

## இலட்சியம் வாழும்

போரிலே புலியின் பொன்னுயிர் போகலாம்
விழுப்புண் வாங்கிய வித்துடல் சாயலாம்
சாய்ந்த புலியின் சுடுபொறி ஏந்தி
விழிகளில் விடுதலைச் செம்பொறி தாங்கி
தமிழீழம் ஒன்றே கருத்தில் கொண்டு
போர்க்களம் செல்லும் புதியவன் நெஞ்சில்
சாய்ந்த புலியின் இலட்சியம் வாழும்!

-சந்திரவதனா செல்வகுமாரன், யேர்மனி.



## உயிர்ப்பு

கவிக்கென்ன பஞ்சமய்யா உனைப்பாட-
களம்கண்ட மறவா உனைக் குவிப்பாட்டும்.
காதலுற்றாய் களமேறி ஈழமண்கொள்ள
கரைந்திட்டாய் மீட்பதனில் இனவெறியொடுக்கி
முகம்கொள்ள மறுவீரன் முந்திட்டான்-ஈழம்
அகமேந்தி, உடலேந்தி ஏறுநடையாக!
அவனேந்தும் வீரவுடலோடு ஈழம் உயிர்பாகும்!
மாவீரா! மனமேந்தும் உனக்கான மலர்க்குவியல்!

-கோசல்யா சொர்ணலிங்கம், யேர்மனி.

## நம்பிக்கை வடிவம்

ஈழவர் பாடுகளை தோளில் சுமந்திட்ட
இயேசுக்களின் சிலுவை-
மீளவும் வருவோமென களமேறி விண்புகுந்த
வேங்கைகளின் வாசல்-
பாழும் பகைவிரட்டி வரிப்புலிகள் வெல்கவென
பெரிதொலிக்கும் தாரை-
கூழும் கஞ்சியுமாய் குளிரோடு வெயில்காயும்
குடிகளது நம்பிக்கை வடிவமிது!

-அமலா ஜெயந்தன், யேர்மனி.

## மலர்ந்து மடிந்த மலர்

மலர்ந்து மடிந்த மலரே
மலரப்போகும் வெற்றி நீயே
மண்ணிற்காக மலர்ந்து
மக்களுக்காக மடிந்தாய்;
வருங்காலம் எங்கள் தமிழீழம்
உன் பெயர் கூறும்.

-ம. நவபாஸ்கரன், சுவிஸ்.

## பூவுடன் பூவானீர்

பூபாள நேரம் புலியானீர்
புயலுக்கு புதிர் ஆனீர்
பூவிலும் மேலானீர்
புனிதமான மண்ணுக்காய்
புதைகுழியில் துயில்கொண்டீர்
மாவீரரே உமக்கேது மரணம்!

-திருநெல்வேலிச் சிவகுமார்,
யேர்மனி.

## விடுதலை தேடிவிரையும் காலடிகள்

மண்ணுக்காய் மரணித்த மாவீரனே! தமிழர்
மனங்களுக்குள் பூஜிக்கும் புலி மைந்தனே!
கண்ணுக்குள் உன்வீரம் விளையாடுதே-அந்த
விண்ணுக்குள் மதிகூட உனை வாழ்த்துமே.

களத்துக்குள் காவியங்கள் படைத்தவனே!
சிங்கள படைக்குள் வேங்கையாய் பாய்ந்தவனே!
கல்லறைக்குள் கண்விழித்துப் பார்க்கிறாயா? உன்
கால்தடத்தில் பலகால்கள் தொடர்ந்து செல்லும்!

-திருமதி சக்திதேவி சத்தியநாதன்,
யேர்மனி.

## உதிக்கும் நாளை

உன்னைச் சுமந்து செல்வதனால்
உறைந்திடாது எந்தனுள்ளம்
உன்னுடல் கையில் சுமக்கிறேன்
இலட்சியத்தை நெஞ்சில் சுமக்கிறேன்
சுதந்திரக் காற்றை சுவாசித்து எம்மண்ணில்
உதிப்பான் நாளைச் சூரியன்
விதையாய் வீழ்ந்த தோழருடன்-அதை
விண்ணிருந்து மகிழ்வாய்.

-பொன் சிவா, நோர்வே.

## புதைக்க அல்ல மாவீரனே....

மனம் இரும்பல்லவே
ஆயுதம் தரித்திட.
என் தோள் ஆயுதம் சுமந்தது
தமிழர் வேதனை சகிக்காமல்.
இன்று, என் கரங்கள் உன்னை சுமக்கின்றதே
புதைக்கவல்ல மாவீரனே, விதைக்கவே!
என் மனம் உன்னைத் தாலாட்டுமே,
நீ, மீண்டும் மீண்டும் புலிவீரனாய் பிறக்கும்வரை!

-இரத்தினசிங்கம் சிறீஸ்கந்தராசா, யேர்மனி.

## தலைவன் வழி நடப்பவனாய்....

கருவில் மகவாகி
களத்தில் புலியாகி
வாழ்வில் மெழுகாகி-நம்
விடுதலைக்காய் போராடி
தலைவன் வழி நடந்து
மாபெரும் வெற்றியீட்டி
மாவீரர் ஆனீரோ..?

-திருமதி இராஜேஸ்வரி லோகநாதன், யேர்மனி.

## உயிர்ப்பூ

இவன் ஏந்திச் செல்வது
உயிரற்ற உடலல்ல
ஓரினத்தின் விடிவிற்காய்
விழுந்த உயிர்ப்பூ
ஒருயிர்காக்க பிறதேசம் ஓடுகையில்
தன் தேசம் காக்க
தளராது நின்று போரிட்ட
உறுதியின் உறைவிடம்.

-ஷாங்கி, லண்டன்.

## எங்களின் தெய்வங்கள்

மாவீரர்களே!
மண்ணின் விடுதலைக்காய்
விண்ணில் சென்றீர்களே!
பொழுதுசாயும் நேரம்
ஆயிரம் ஆயிரம் தீபங்கள்-ஏந்தி
உம் கல்லறை தேடிவந்தோம்
மாவீரர்களே! உங்கள் நினைவுடன்
தமிழீழம் மலரும்!

-லே. டெசி (மணற்காடு), தமிழீழம்.

## இன்றும் துடிக்கிறது உங்கள் இதயம்

இளமைக் கனவுகளை மறந்து
ஈழக்கனவை வளர்த்து - தலைவன்
வழியில் புயலெனப் பாய்ந்து
அனலெனத்தாக்கி பகைவிரட்டிட-நீங்கள்
சிந்திய குருதியில் நனைந்தது தமிழீழம்-உங்கள்
கரம்பற்றி, பொறுப்பெடுத்த கருவிகளில்-இன்று
துடிக்கிறது உங்கள் இதயம்.

-தன்னாலையூர்க் குகதாசன்,
யேர்மனி.

## ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

சுவிஸ்: பிரபா, புங்கையூர் த. மதி, பெலிசிற்றஸ் ஜோசப், நடராஜா சந்திரகுமார்.
நோர்வே-தாஸ்.
பிரான்ஸ்- அ. அமுதா, துஷ்யந்தி சற்குணநாதன், தனம், க. ரமேஷ்.
இத்தாலி-யோ. நந்தகுமார், லே. ராஜன், சி. பிரதீபன்.
யேர்மனி-இ. இராஜமோகன், எவ். பிறேமானந்தன், செல்வி சந்தியா ரவீந்திர-ராசா, புவனேந்திரராசா இளங்கோ, பாலசிங்கம் முருகதாசன், கதிரவன், தென்கருணையூர் சிவசிறி, திருமதி மனோரதி சரவணபவன், ம. தேவன்ரவி, காவலூர் க. செல்வராசா, திருமதி ஜெகதீஸ்வரி சிவகுமார்.
இந்தியா- ச. வேல்முருகன்.
ஆ. விக்னேஸ்வர், வல்வை கித்துள், க. சிவா, மலரவன், ந. உதயகுமார், பூ. சுபாங்கி, ம. சந்திரசேகர், வட்டூர். இரா. ஜெயமோகன்.

# உலகத் தமிழினமே! முழக்கம் இங்காகட்டும் முரசு உனதாகட்டும்

வெளியில் வராத குரல்களாக
விழுங்கப்படுகிறது எம்வாழ்வு.
மருத்துவர்களால் கைவிடப்பட்ட
தீராப்பிணியனின்
சிரிப்புப்போலாச்சு எம் இருப்பு.



யாரொடு நோகலாம்?
யார்க்கெடுத் துரைக்கலாம்?
எத்தெய்வம் சபித்தது எம் தலையில்?
தீவொன்றில் தனித்துவிடப்பட்டவர்களாக
நாங்கள்.
எவரெம் குரல்களை உலகுக்குச்
சொல்வரோ?
எம்மை நோக்கிய வையவீழிகள் எப்போ
திறக்கும்?
இருபத்தோராம் நூற்றாண்டுக்கு
தாலிகட்டத் தயாராகிறது உலகம்.




- வியாசன்

பதினாறாம் நூற்றாண்டிற்
படுத்துக்கிடக்கின்றோம் நாம்.
நிரவமுடியாத அகழி.
நினைக்கமுடியாத தொலைவு.
குறுக்குவெட்டாக துண்டிக்கப்பட்டவனே
உயிர்க்கும் போது
நெருப்புச்சுட்ட புண்ணுக்கே எங்களுக்கு
மருந்து கிடையாது.
உலகெங்கும் அடித்துவிரட்டப்பட்ட
மலேரியா கூட
ஓடிவந்து இங்கேதான் ஒதுங்கிக்
கொண்டது.
தடிமன் மருந்துக்கே தட்டுப்பாடு.
இங்கு மருத்துவர்கள் கை பிடிப்பது
வைத்தியம் செய்யவல்ல.........
வெறும் மன நிறைவுக்கே.
சுக்கும், மிளகும், சுடுநீருமே உயிரைத்
தாங்கிக் கொள்கிறது.
எத்தனைக்கென்றுதான் அழுவது?
ஊற்றடைத்துக் கொண்டது விழிக்கிணறு.
உலகமேன் ஊமையானது?
பூமிப்பந்தின் பரப்பெங்கும் தமிழன்
இருக்கின்றான்.
எம் குரல்கள் மட்டும் ஏன் கேட்கவில்லை?
உறக்கம் கலைக உலகமே!
இங்கே சேடமிழுத்துக் கிடக்கிறது
மனிதப்பிண்டம்.
இதற்காகவும் எவரெனினும் பேசுங்களேன்.
உரிமைக்குக் குரல் கொடுக்கும் ஒரு
இனத்துக்கு
இதுதானா கதி?
ஆரோகணித்திருக்கச் சிம்மாசனமா
கேட்டோம்?
கால்மடித்திருக்கக் கதிரைதானே
கேட்கின்றோம்.
இதற்காகவா இந்தப் பாரச்சிலுவை?
இயக்கர்களாக அவர்களும்........
நாகர்களாக நாங்களும்.........
இல்லையெனில்.........
அவர்களாக அவர்களும்.........
நாங்களாக நாங்களும்.........
இதுவுமில்லையெனில்........
ஏதோ ஒரு வழியில்
ஒன்றாயிருந்த வீட்டிற்தானே உரிமை
கேட்கின்றோம்.
பாதிவீட்டைத் தந்தாற்போதும்.
மீதி வீடு அவர்களுக்குத்தான்.
இந்தப் பிரிவீடுதலுக்கேன் இத்தனை
கொதிப்பு?
மிஞ்சிய சோறுவாங்கிக் கும்பிடு
போடுவதற்கு
நாங்கள் இராப்பிச்சைக்காரர்களல்ல.
தாம்பத்தியம் தள்ளாடும் போது
விவாகரத்துத்தான் விமோசனமளிக்கும்.
சமாதானத் தூதுவர்கள்
தோற்றுப்போனபோது
பேச்சுவார்த்தை மேசையின் பூச்சழிந்த
பின்னரே
நாங்கள் போருக்கெழுந்தோம்.
இடிக்க வந்தது மாடு.
அடித்தோம்.
மாட்டுக்கு அடித்தல் பாவமென
மனுப்போடுபவர்களே!
எங்கள் கூட்டையே குலைத்தது குரங்கு.
குரங்கையேன் நீங்கள் குற்றம்
காணவில்லை?
யானை வந்தழிக்கிறது எங்கள் புலவை.
வெடிகொளுத்திப் போடுகின்றோம்.
மிதிக்கும்போது ஊமையான வாய்கள்
கலைக்கும்போது மட்டும் கண்டிக்கின்றன.
எருமைத்தோல் உடுத்தவனா தமிழன்?
சுரணையற்றுக் கிடப்பதற்கு.
உதைத்த காலுக்கு முத்தமிட்டுக் கிடந்த
ஒரு இனத்தின் ஓரத்தில்
நெருப்புப்பொறியொன்று நீறுபூத்துக்
கிடந்தது.
அது........ பிரபாகரன்.
கோபம் உரசியபோது தீக்குச்சி
பற்றிக்கொண்டது.
இன்று தீச்சுவாலை மூளாசி எரிகிறது.
தர்மயுத்தமென்பதே தமிழீழப்போரானது.
பாரசல் நடக்கும் போது
பாவ புண்ணியக் கணக்கு கொஞ்சம் கூடும்,
குறையும்.
அதற்கேன் இத்தனை ஒப்பாரி?
மரங்களைத் தறிக்காதே;
சூழலை மாசு செய்யாதே;
மிருகங்களை வதையாதே;
பூக்களைக் கிள்ளாதே....... என்று
குரல்கள் கேட்கின்றனவே.
ஈழத்தமிழனை எரித்து முடிக்காதேயென்று
உலகமுகடையிடிக்கும் குரல்கள் எப்போது
எழும்?
அவலக்குரலை எப்போது உலகமறியும்.
எல்லைகளை;
வேலிகளை;
வரம்புகளைக் கடந்து
ஈழத்தமிழரைத்தாங்க நீளும் கரங்கள்
எப்போது கிட்டும்?
அழியும்வரை போராடுவோம் என்பதில்
அர்த்தம் கிடையாது.
கிட்டும்வரை எட்டுவோம்.
உயிரெனப்படுவது மானம்.
அதையிழந்து வாழ்வதென்பது
சாவுக்குச்சமம்.
பெரும்புயலில் அல்லாடுகிறது
எம்போர்ப்படகு.
கரையேறக் கயிறெறியுங்கள்.
உலகத் தமிழினமே?
உன்போர் இது....... உனக்கான போரிது.
முழக்கம் இங்காகட்டும்.
முரசு உனதாகட்டும்.
எம்மைக் காசுக்கு யாசிக்கவிடாதே.
வாரி வழங்கு.
தாங்கும் தோள்களிலொன்று
உன்தோளுமாகட்டும்.
மூட்டம் போட்ட மேகத்தைக் கலைத்து
உரிமைப் போருக்கு ஊட்டம்கொடு.
வாழ்ந்தான் தமிழனென வரலாறு



எழுதப்படும்போது
முன்னுரையிலே உன்பெயர் இருக்கட்டும்.
பரணிக்கு நாயகர்களைப் பாட
உலகெங்குமிருக்கும் புலவர்களே எழுக.
பொய்மைத்திரி அணைந்து போக
உண்மையை வாயால் ஊதுங்கள்.
சத்தியமே ஜெயம்.
சூரியன் யாருக்கும் சேவகம் செய்தவர்
கால்களிற் பூசைகள் செய்யாது.
போரினிலே பிரபாகரன் சேனைகள்
சாவினுக்கஞ்சியே ஓடாது. ✳

# ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அதியுயர் அடாவடித்தனம்

**யாழ் குடாநாட்டைக் கைப்பற்றிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனத்திற்கு உட்பட்டு சிதைத்தழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள்**





இனத் துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிரிப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களாற் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துமிலும் இல்லங்களைச் சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனமென இச் செயலைச் சிறுமைப்படுத்திவிட முடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச் செயல். தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறையை ஏற்படுத்திய இந்த அவச்செயலுக்குச் சிங்களப் பேரினவாத அரசே பொறுப்பேற்க வேண்டும்.

**– தமிழீழத் தேசியத் தலைவர்**





T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Kornquader Weg - 12
7007 Chur, Switzerland
Tel: 081-252-91-29

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7389

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224